தனிப்பிரதி 1 அணா  வருட சந்தா ரூ. 5.  **REGD. NO. M. 4455.**

# திராவிடநாடு

ஞாயிறு வெளியீடு.

ஆசிரியர்
C. N. அண்ணாதுரை M. A.,

"தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்!—இன்பத்
தமிழ் எங்கள் வலமிக்க உளமுற்ற தீ!"
[கவி பாரதி தாசன்]

மலர் 1 || காஞ்சிபுரம் 26—4—42 சித்திரபானு—சித்திரை 14உ ஞாயிறு || இதழ் 8

# தேன்சுரக்கப் பேசி......!

பரதன்

எதிரியின் குதிரைப்படை கிளப்பிய தூசி, கோட்டையின்சுவற்றில் படியத் தொடங்கிற்று. கோட்டைக்குள்ளே இருந்த மன்னன், "கூப்பிடுமந்திரியை" என்று கூவினன். "மகராஜ்! மந்திரி, மகள் வீட்டுக்குப் போய்விட்டார்" என்றான் சேவகன். "சேனாதிபதி எங்கே?" என்று சீற்றத்துடன் கேட்டான் மன்னன். "மாமி வீட்டுக்குப் போயிருக்கிறார், மனைவி மக்களுடன்" என்று பயத்தோடு கூறினன் சேவகன். "துரோகிகளே! என்உடை வாளெங்கே! அதையேனும் கொடுஇப்படி" என்று கர்ச்சித்தான் அரசன்.

"அரசே! துருப்பிடித்துப் போயிருந்ததால், சாணைபிடிக்கஅனுப்பினர் அரசியார்" என்று மெல்லிய குரலிற் கூறினன் சேவகன்.

"நீயாவது வா. இருவரும் போவோம் படைகளுடன்" என்று கூறிக்கொண்டே அரசன் எழுந்தான். "வரவிருப்பந்தான் வேந்தே! ஆனால் வயிற்றுவலி பொறுக்கமுடியவில்லை. வைத்தியரிடம் போய் மருந்துசாப்பிட்டுவிட்டு, வந்துவிடுகிறேன் விநாடியில்" என்றான் சேவகன். தலைமீதுகைவைத்தான் மன்னன்!

இதுகதை! எங்கே நடந்தது என்கிறீர்களா? எல்லாக்கதைகளும் நடந்ததுபோல், இதுவும் ஒரே ஒருஊரில் ஒரு இராசா இருந்தானும், அவன்நாட்டின் மீது பக்கத்துஊர் இராசா படை எடுத்தானும்—என்ற கதைதான். கதை சொன்னது பொழுது போக்குக்காகவல்ல. கருத்து வேறே! கேளுங்கள் தோழர்களே, இந்த இராசாவின் கதை இருக்கும் விதத்தை ஏறக்குறைய ஒத்திருப்பதுபோல், சென்னையிலே சம்பவம் நடந்திருக்கிறது. அதைப்படித்ததும், இந்தக்கதை நினைவிற்கு வந்தது, உங்களிடம் சொன்னேன்.

சென்னைவட்டாரத்தில், யுத்த ஆதரவுப் பிரசாரத்துக்குக் கமிட்டிகள் உண்டு, தலைவர்கள் உண்டு, காரியதரிசிகள் உண்டு. பிரசாரம்செய்து, பீதியைத் தடுக்க, மக்களுக்கு உண்மை விளங்கச்செய்ய, மக்களை வீரர்களாக்க, படை பலத்தை எடுத்துக்கூறி பயங்கொள்ளித்தனத்தைப் போக்க, சென்னை மாகாண யுத்தப் பிரசாரக்கமிட்டி ஒன்றுண்டு. ஆனால்........! அதுதான் வேடிக்கை! எங்கே, அந்தப் பிரசாரக் கமிட்டி நிர்வாகிகள் என்று, கதையிலே கூறப்பட்ட இராசாபோல், யாரேனும் கேட்டால், இராசாவுக்குக் கிடைத்தபதில்தான் கிடைத்து விடும்.

சென்னைமாகாண யுத்த ஆதரவுப் பிரசார சப் கமிட்டிஎங்கே? சென்னையில்இல்லை! மதனப்பள்ளிக்கு மாற்றப்பட்டு விட்டது!! அந்தக் கமிட்டியின் தலைவர் எங்கே? தஞ்சாவூர் போய்விட்டார்! மேற்படி சப் கமிட்டியின் காரியதரிசி எங்கே? சேலம் சென்று விட்டார்!

சண்டைசெய்து, இரத்தம் சிந்தி, எதிரியின் படை எண்ணற்ற அளவுள்ளதாக இருக்கக்கண்டு, பின்வாங்கிய பிரிட்டிஷ் படைகளைக்கண்டு கேலிசெய்த "பெருங்குணவான்கள்," குண்டுவிழாத சென்னையிலே, யுத்தப் பிரசார வீரர்கள், ஆளுக்கொரு மூலையாக, அவிழ்த்துவிட்ட அசுவங்கள் மிரண்டோடுவதுபோல், ஓடிவிட்டதைக்கேட்டு, என்ன சொல்லப்போகிறார்கள் என்று கேட்கிறேன். இந்தத்தோழர்கள், ஆபத்தை வரவேற்க வேண்டும், குண்டுகளைச் செண்டுகளாகக் கொள்ளவேண்டும், என்று நான் கூறவில்லை. உயிர் விலை மதிக்க முடியாததுதான்! அதிலும் உல்லாசவாசிகளுக்கு, உயிர் வெல்லம்! எனவே அந்தத்தோழர்கள், வெளியூர் சென்று விட்டதற்காக அவர்கள் மீது வெகுண்டு வெடுக்கென்று கடிக்கவேண்டுமென்று நான் யாரையும் ஏவவில்லை. போகிற புண்ணியாத்துமாக்கள், சென்னையிலேயே தங்கியிருக்கும் வேறுசிலரிடம் மேற்படி "வேலைகளை," "கடமைகளை" ஒப்புவித்து விட்டுப்போகக்கூடாதா? கிலிவேண்டாம்! பீதி அடையாதீர்! எதிரியைக்கண்டு மிரளவேண்டாம்! கோழைத்தனம் கூடாது! என்று பேசிவந்தவர்கள், பேசவேண்டியவர்கள், தங்கள் செயலால் செய்யும் பிரசாரம் எவ்வளவு மோசமாகிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டாமா? எண்ணிப்பார்த்து, "எம்மால் முடியாது இந்த வேலை, இதோ ராசினாமா" என்று கூறிவிட்டு, கண்ணியமாக, "கடவுள் புண்ணியத்தால், தலைதப்பிற்று" என்று கந்தகோட்டத்தானையோ, காமாட்சியையே கும்பிட்டுவிட்டு, வெளியே போயிருக்கக் கூடாதா என்றுதான் கேட்கிறேன். தோழர்களே! இத்தகையவர்கள் துரைமார் சர்க்காரிலே எப்படியோ இடம் பெற்றுவிடுகிறார்களே அதுதானே ஆச்சரியமாக இருக்கிறது. கடலிலே செல்ல கப்பல் இருக்கிறது; அதற்குக் குடைபிடிக்க விமானமில்லை, விமான மிருக்கிறது ஆனால் விண்ணின் நிலை சரியாக இல்லை, கரைநிலை சரியாகஇருக்கிறது ஆனால், கருத்து

தெளிவாகவில்லை, என்று இராணுவத் துறையிலே ஏதேதோ கூறக்கேள்விப் படுகிறோமே, அதைவிட கேலிக்கூத்தாக வன்றோ, இந்த பிரசாரக் கமிட்டி பிடித்தது ஓட்டம் என்ற செய்தி இருக்கிறது.

யார்போனாலென்ன! எவர் ஓடினாலென்ன? மாஜி முதலமைச்சர், மாம்பலமாவீரர் இராசகோபாலாச்சாரியார் இருக்கிறார், என்ற மனஆறுதல் உண்டாயிற்று எனக்கு. பத்திரிகையிலே படித்தேன், சென்னைமேயர் நிறுவிய பாதுகாப்புக் கமிட்டிக்கூட்டத்தில் அவர்பேசினார் என்று இருந்தது. மகிழ்ச்சியோடுபடிக்கலானேன். ஆச்சாரியார் அஞ்சா நெஞ்சர்தான்! என்று பூரித்தேன். சென்னைப்பாதுகாப்புக்காக அவர், கச்சையை வரிந்து கட்டுவார், தோள் தட்டுவார், துரைமார்கள் கண்டும் வெட்கும்படி, வேதியகுலத்து வேவலாக வெளிவருவார், என்று மனதிலே எண்ணங்கள் எழும்பின. இந்தி எதிர்ப்புக்காலத்திலே இலட்சக்கணக்கான தமிழர்களின் எதிர்ப்பு, ஆயிரக்கணக்கான பொதுக்கூட்டபாணங்கள், நூற்றுக்கணக்கான மாநாட்டுவாள் வீச்சுகள், கண்ணையும் கருத்தையும் தாக்கிய கருப்புக்கொடிகள், ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் அழுதகண்ணீரெனும் கூர்வாள், தாலமுத்து நடராசனின் பிணங்கள், அவை கொளுத்திய போது கிளம்பிய சுடுநாற்றம், தாலமுத்துவின் மனைவி அறுத்தெறிந்த தாலி, ஆகிய எதற்கும் அஞ்சாது, விந்தியத்துக்கு மேலிருந்து குலுக்கி நடந்துவந்த இந்தி மங்கையைக்குலவிவாழ்ந்த நெஞ்சுறுதி ஆச்சாரியாருடையதல்லவா! அந்த நெஞ்சுறுதி, இந்த நெருக்கடியான நேரத்தில் நின்று உதவும் என்றுநான் எண்ணினேன். எனவே படித்தேன். படித்துமுடிந்ததும், என்னென்பேன் தோழர்களே, எனக்குமற்றோர் கதை வந்தது நினைவுக்கு.

மனைவிமீது மகா கோபங்கொண்ட ஒருகணவன், வாய்வலிக்கத் திட்டிவிட்டு, வாருகோல் எடுத்து வாங்குவோம், அவள் முதுகில்என்றுதுடித்து, வாருகோல் தேடுகையில், வந்ததாம் ஒருபாம்பு! குய்யோ முறையோவெனக் கூவினாள் மனைவி. குதித்தான் கணவன். "அடிமுட்டாளே! கூச்சலை இங்கே போடுகிறாயே தெருவுக்குப்போய் கூச்சலிட்டு யாராவது ஆடவர் போனால் அவசரமாக அழைத்துவா", என்றானாம் கணவன்! அதுபோல், ஆச்சாரியார், ஜப்பானியராவது இங்கு வருவதாவது? வந்தால்தான் என்ன? அவர்கள் என்ன செய்துவிடமுடியும்? செய்யத் துணிந்தால்தான் என்ன நாம் வீரர்களல்லவா? நாம் திரண்டெழுந்து தடுப்போம், நொறுக்குவோம் அவர்களை" என்று வீர முழக்கம் செய்தார் மேயர் முன்னிலையில். ஒல்லியான இந்த உருவம், பந்திக்கு ஓடிடவும், படைகண்டால் பதுங்கிடவும் பஞ்சாங்கம் ஓதிடவுமே பயின்ற இனத்தவர், இவ்வளவு வீரமாகப் பேசக்கேட்டு, மேயரும், கமிட்டி அங்கத்தினர்களும், ஆச்சரியப்பட்டே இருந்திருப்பார்கள். என்னை அந்தப்பத்து வரிகள் தூக்கி வாரிப்போட்டன. ஆனால்............! அதுதானய்யா வேடிக்கை, கேளுங்கள், **"கட்சிக் கட்டுதிட்டங்களின் காரணமாக நான் சென்னை நகர பாதுகாப்புப் பணியில் பங்குகொள்ள முடியாது. காங்கிரசல்லாத மற்றவர்களே! நீங்களேனும் சென்னை நகரைப் பாதுகாக்க முனையுங்கள்"** என்று முடித்தார் முப்புரி நூலணிந்த முதியோர்! எப்படி அவர் வீரம்! பாம்புகண்ட கணவன், பார்த்துப்பிடித்துவா ஆண்பிள்ளையை என்று மனைவியைக் கட்டளையிட்டானே அதற்கு, ஆச்சாரியாரின் "வீரம்" கொஞ்சமாவது குறைந்திருக்கிறதா கூறுங்கள். போரிட, நகரைப்பாதுகாக்க, ஆச்சாரியாருக்கு முடியவில்லை! காரணம், கட்சிக்கட்டுப்பாடாம்! அந்தக்கதையில்வரும் கணவன் கூடத்தான் கூறுவான், "பாம்பை அடிக்க எனக்கென்ன பயமா? இன்று அமாவாசை புண்ணிய காலம், பாம்பைக்கொன்றால், ஆதிசேஷனின் சாபம் பிறக்குமென்று அஞ்சினேன். சாபத்துக்கு அஞ்சினேனேயொழிய சர்ப்பத்துக்கு அஞ்சவில்லை. சாதாரண நாட்களில், சர்ப்பம் எனக்கோர் சருகு! என்று கூறுவான் வாயாரவலிக்கும்! கேட்டால் காதுதான் வலிக்குமா? இப்படி இருக்கிறது ஆச்சாரியாரின் அசகாய சூரத்தனம். கண்ணன் அவருக்குக் காட்டியவழி இதுதான்போலும், வேவல்களே! மாக் ஆர்தர்களே! ஆக்கின் லெக்குகளே! சியாங்கேஷேக்குகளே, ஸ்டாலின்களே, சற்றே விலகி நில்லுங்கள், வழிவிடுங்கள், எங்கள் "ராஜாஜி" வருகிறார், என்று காங்கிரஸ் தோழர்கள், கூறி வாழ்த்த இதுதான் சரியான தருணம். "இவ்வளவு வீரதீரவிற்பன்ன வேதியர் இங்கிருக்க, வேவல் இங்கு ஏன்" என்று வேலூர் வேட்டும், விருதைச் சிறுத்தையும், கோவைக்கு தாக்கமும், பேட்டைமுதலியாரும், குமாரமங்கலப்பிரபுவும், கூறி, கொடிதாங்கி, கும்மிகொட்ட இதுதான் தக்க சமயம். இச்சமயம் தவறினால் மறுசமயம் வாய்ப்பதரிது! எடுங்கள் ஆலத்தி! விடுங்கள் வாணங்களை! வாத்தியங்கள் ஒலிக்கட்டும்! வந்தார் வீரர்!!

ஆச்சாரியார், அன்று சொன்னதுபோலத்தான் அவரின் மூதாதையர், நமது மூதாதையரிடம் முன்னாளில் கூறினர். இந்நாள் இவரது இயல்பு எதுவோ, எண்ணம் எதுவோ, அதுதான் அவரது மூதாதையர் பன்னெடுங்காலமாகக் கொண்டிருந்தது.

"காட்டிலே மிருகங்கள் தொல்லை!' யாகத்தை அழிக்க இராட்சதர்கள் ரகளை! அந்த அரசன் ஆணவமாக எனக்குப் பிட்சையிட மறுத்தான், என்று இருடிகள், முனிகள், தபோதனர்கள், மன்னர்களிடம்கூறி மாநிதி, படை முதலியனபெற்றனர் என்று புராணங்கள் படிக்கிறோமே, அவைகளில் புதைந்து கிடக்கும் பாடம் இதுதான். சண்டைக்குத் தமிழர், இரத்தஞ்சிந்தத் தமிழர், போரிட்டுமாளத் தமிழர் பொன்தர புத்திரரை இரணகளத்தில் பலியிடத்தமிழர், உழைக்க உருக்குலைய தமிழர், ஊர்காக்க, படைநடத்த பகைவரை அடக்கத் தமிழர், வேதமோத தீமூட்டி திருமந்திரம்கூற, விருந்துண்டு வியர்வையைத் தடுக்கச் சந்தனம் பூசிக்கொள்ள, பூரிதட்சணைபெற, ஆரியர், பார்ப்பனர்! இது அன்று ஆரியர் வகுத்தனர். இன்று ஆச்சாரியார் மேயர் கமிட்டியிலும், அதே முறையில் தான் திட்டம் தீட்டினார். சிறுத்தையின் புள்ளி, செந்நாயின்வெறி, குரங்கின் குறும்பு, பூனையின் துடுக்குக்குணம், போகாது என்பார்கள்! ஆரியர்களின் குணதிசயமும் அதுபோன்றதே. 1942ல் சென்னை இரிப்பன் மண்டபத்தில், மேயர் முன்னிலையில், ஆச்சாரியார், வீரமுழக்கம் செய்துவிட்டு, எதிரியைத்தடுக்க இனிநீங்கள் முனையுங்கள், எதற்கும் அஞ்சாதீர், எனக்கோ கட்சிக் கட்டுப்பாடு குறுக்கிடுகிறது என்று எங்கனமுரைத்தாரோ, அதுபோல், அந்நாளில் அரசசபைகளில் ஆரியர்கள் தமிழ் மன்னர்களிடம் பேசினர், மண்ணில் நமது இனத்தவர் இரத்தத்தைச் சொரிந்தனர், நெருப்பில் ஆரியர்நெய்யைச் சொரிந்தனர், நமது மன்னர்கள் மாய்ந்தனர், ஆரியர்கள் வாழ்ந்தனர்!

நான் கேட்கிறேன், வீரம்பேசும் ஆச்சாரியார், நகரைப்பாதுகாக்க, மற்றவர்களைத் தட்டிவிடுகிறாரே தான்மட்டும் ஏன் தலைமறைகிறார்! கட்சிக் கட்டுப்பாடு என்ற சாக்குக்கூறி யாரை ஏய்க்க எண்ணுகிறார்? எதிரியை விரட்ட வேண்டியதைக் கடமையென ஆச்சாரியார் உண்மையில் கருதினால், குறுக்கே நிற்கும் கட்சிக்கட்டுப்பாட்டைக் குப்புறக்கவிழ்க்க மாட்டாரா? நாட்டுக்கு ஆபத்து, நாம் அஞ்சாது எதிரியை அடக்க வேண்டும் என்று ஆச்சாரியார் கூறுகிறாரே, அதைச் செய்ய ஒட்டாது கட்சிக்கட்டுப்பாடு தடுக்கிறதுஎன்று கூறுகிறாரே, அதன் பொருள் என்ன? அவரதுகட்சி, நாட்டைக்காப்பாற்ற ஒட்டாது தடுக்கும் துரோகச் சபை என்றுதானே அவர் பேச்சிலிருந்தே வெளிப்படுகிறது. அத்தகைய துரோக சபையிலே பந்தமும் பாசமும் இவர்கொண்டிருக்கிறாரே, இவரும் துரோகி

[11-ம் பக்கம் பார்க்க]

அறிவியற் பகுதி

# இந்து மதமுந் தமிழரும்

நக்கீரன்.

முன் தொடர்ச்சி.

வடக்கே இமயமலைச் சாரலில் இருக்கும் கேதாரம் என்னும் இடத்திற்கும் தெற்கே தஞ்சாவூருக்கு அருகாமையிலுள்ள திருவையாறு என்னும் இடத்திற்கும் இடையேயுள்ள தொலைவு ஏறக்குறைய 2500-கல் இருக்கும். இவ்வளவு தொலைவைத் திருநாவுக்கரசர் தம்முடைய காற்சுவடு நிலத்திற் படாமல் எப்படி வந்தார் என்பது தெரியவில்லை. ஒருவேளை நீருள் மூழ்கியபடியே காற்சுவடு நிலத்திற் படாமல் வந்தார் என்றால், அத்தகைய ஒரு நீர்த்தொடர் கேதாரத்திற்கும் திருவையாற்றுக்கும் இருக்கிறதா என்பதை அறிய நிலநூல் ஆராய்ச்சி வல்லுநர்க்கு விட்டுவிட்டாலும், 2500-கல் தொலைவிற்குத் தொடர்பாகவுள்ள நீர்ப்பரப்பை ஒருவன் எங்ஙனம் ஊடுருவி வர முடியுமென்பதையாவது இத்தகைய புராணப் புளுகுகளை நம்பும் அன்பர்கள் ஆராய்ந்து பாராமல் இருப்பது பெரிதும் வருந்தத் தக்கதும் இரங்கத் தக்கதுமாகவே இருக்கிறது. தண்ணீரில் மிதந்துசெல்வது அதாவது நீந்திச் செல்வதில் பழக்கமுள்ளவர்கள்கூட ஐந்து அல்லது பத்துக்கல் தொலைவான நீர்ப்பரப்பைத் தானும் கடக்க முடியாது. தண்ணீரில் நீந்திச் செல்வதிலோ அன்றி அதனுள் மூழ்கிச் செல்வதிலோ மிகவுந்திறமை வாய்ந்தவர்கள் தங்கள் கனவிலும் எண்ணமுடியாத ஒரு பெருந்தொலைவை, அத்துறையில் ஒரு சிறிதும் பழக்கமோ பயிற்சியோ இல்லாத திருநாவுக்கரசர் செய்து முடித்தார் என்பது வியப்பினும் வியப்பாகவன்றோ இருக்கிறது. இத்தகைய ஒரு அண்டப்புளுகை இந்து மதம் போன்ற மதநூல்களிலன்றி வேறெங்கேனும் காண முடியுமா? தமிழ் மக்களை இந்துமதமென்னும் படுகுழியில் வீழ்த்தி அவர்களைத் தங்கள் அடிமைகளாக ஆக்குவதற்கு ஆரியர்கள் புனைந்து வைத்த இத்தகைய கதைகளை இனிமேலாவது ஆராய்ச்சிக்கண் கொண்டு நோக்கி இயற்கை வழி நடக்க முயல்வது இனித் தமிழ்மக்கள் கடைப்பிடியாய்க் கொளற் பாலதொன்றும்.

இனி, அக்கதையில், தமிழ்மக்கள் தங்கள் கருத்தைச் செலுத்திப் பார்க்க வேண்டியதொன்றுண்டு. அதாவது, திருநாவுக்கரசர் அசையமுடியாது களைப்புற்றுக் கிடந்த இடத்திற்கு வந்து அவருடன் உரையாடியவர், திருநாவுக்கரசரை நோக்கி, “நீர் உமது உடம்பிலுள்ள உறுப்புக்கள் எல்லாம் அழிந்துபோக வருத்தத்தோடும் இந்தக் கொடிய காட்டில் எதன் பொருட்டாக வந்தீர்” என்று வினவியதாகவும், அதற்குத் திருநாவுக்கரசர், “நமது கடவுளாகிய சிவபெருமான் வடகைலையிலே பார்வதி அம்மையாரோடு வீற்றிருக்கும் காட்சியைக் கண்டு களிக்க விரும்பி வந்தேன்” என்று விடைபகர்ந்ததாகவும், அதற்கு அவர் “தேவர்களாலும் அடையப்படுவதற்கு அரிதாகிய திருக்கைலாயத்தை மக்களால் அடையப்படுவது ஆகக்கூடிய காரியமா? நீர் இந்தக்கொடுஞ் சுரத்தில் வந்து என் செய்தீர்? இனி நீர் திரும்பிவிடுதலே நலம்” என்று கூறியதாகவும்; திருநாவுக்கரசர் “திருக்கைலாய மலையில் வீற்றிருக்கின்ற சிவபெருமானைக் கண்டன்றித் திரும்பேன்” என்று கூறி மறுத்ததாகவும்; திருநாவுக்கரசரின் உறுதிப்பாட்டையும் விடாப்பிடியையும் துணிவையுங்கண்ட அந்தப்பேர்வழி (ஆள்வடிவில் வந்ததாகச் சொல்லப்படும் சிவன்) மறைந்து நின்று, “நாவுக்கரசனே எழுந்திரு” என்று கூறியதாகவும், உடனே திருநாவுக்கரசர் அழிந்த உறுப்புக்கள் எல்லாம் முன்போல நிரம்பப்பெற்றுச் அழகிய வடிவோடும் எழுந்து, “சுவாமி, தேவரீர் திருக்கைலாய மலையில் எழுந்தருளியிருக்கின்ற வடிவத்தைக் கண்டு வணங்க அருள் செய்யும்” என்று வேண்டிக்கொண்டதாகவும்; அதற்கு அவர் (சிவன்) “நீ இந்தத் தடாகத்திலே முழுகித் திருவையாற்றிலுள்ள குளத்திலே கிளம்பிக், கைலாயமலையில் வீற்றிருந்தபடி காணப்படும் நமது காட்சியை அந்த இடத்திலே கண்டு வணங்கு” என்று கூறியதாகவும் பெரிய புராணத்திற் காணப்படுகின்றது. திருநாவுக்கரசர் கதையின் பிற்பகுதியாகிய இந்த இடம்தான் பெரிதும் ஆராய்ச்சிக்குரியதாய் இருப்பதோடு தமிழ்மக்கள் கருத்தூன்றிப் பார்க்க வேண்டியதாகவும் இருக்கிறது.

இந்துமதத்தின் ஒருபிரிவாகிய சைவமதத்திற்குத் தலைவர்கள், **திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சுந்தரர் மாணிக்கவாசகர்** என நால்வர் என்று சைவநூல்கள் நுவல்கின்றன. எனவே, இந்நால்வருள் **திருநாவுக்கரசர் ஒரு தமிழன்** என்பதும் மற்றைய மூவரும் பார்ப்பனர் என்பதும் நினைவில் வைக்கப்பட்டு, நாம் கூறும் உண்மைகளை ஆராய வேண்டியது தமிழ்மக்கள் கடனாகும். திருநாவுக்கரசர் காலம் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதாய் இருத்தல் வேண்டுமென்பது ஆராய்ச்சியாற் புலனாகின்றது. ஆரியர்கள் தமிழ்நாட்டிற்கு வந்து நிலைபெற்றுத் தங்கள் முழு ஆதிக்கத்தையும் செலுத்தத் தொடங்கிய காலம் இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதாய் இருத்தல் வேண்டுமென்பதும் ஆராய்ச்சியாளர் கண்ட முடிபாகும். எனவே, திருநாவுக்கரசர் தோன்றிய காலம் **ஆரிய மதமாகிய இந்துமதம்** தமிழ் நாட்டில் வேரூன்றி நிலைபெற்ற காலமாகும். அக்காலத்தில் பிறந்த தமிழ் மகனாகிய திருநாவுக்கரசரும் இந்து மதத்தின் ஒரு பிரிவாகிய சைவமதக் கொள்கைகளையே பெரிதும் பின்பற்றி ஒழுகி வந்தாராயினும், அவர் இளமையிலே கல்வி பயின்று அறிவு நிரம்பப் பெற்று இருந்தவராகலின், அவருக்கு ஆரிய மதமாகிய சைவமதத்தில் உண்மை எதுவும் இல்லை என்பது புலப்பட்டது.

(தொடரும்)


## குமரன் இசைமலர்

வெளியிடுவோர்:—

“குமரன்” வார வெளியீடு நிலயம்,

காரைக்குடி

விலை 1—0—0

கண்ணைக்கவரும் வனப்புடனும், கருத்தைக் குளிரவைக்கும் இனிய கட்டுரைகளுடனும், ‘இசைமலர்’ வெளிவந்திருக்கிறது. ராஜா சர் அண்ணாமலையார் அரங்களித்து இசைவளர்க்க முற்பட்டதை, ஒரு சிறுகூட்டம் எதிர்க்க முன்வந்தது. தமிழில் இசை ஏது? என்று தருக்கித்தது. அக்கூட்டத்தின் கடாவுதலைத் தூளாக்கும் முறையில் அறிஞர்களின் ஆராய்ச்சிமிக்க கட்டுரைகள் இம்மலரில் உள்ளன. பண்டைத் தமிழர் பண்ணொடு பழகிய பண்பு விளக்கப்பட்டிருக்கிறது. இந்நாளில் உள்ள தமிழர் இசை பற்றி அறிதல் வேண்டும் இசைச் செல்வர்களின் படங்களும் மலரில் உள்ளன. தமிழருக்கோர் நல்விருந்தான இந்த இசைமலரை வெளியிட்ட குமரன் பத்திரிகாலயத்தாரைப் பெரிதும் பாராட்டுவதோடு, தமிழர் இந்த இசைமலரைப் பெற்று இன்புற வேண்டுகிறோம்.

# இளமைப்பலி

—※—

எம் கருணாநிதி திருவாரூர்.

அன்று ஊர்மக்களே வாட்டமுற்றிருந்தனர். கண்ணீர்நல்கா நயனங்களில்லை வாட்டமுறாத அகங்களில்லை.........அவள் சிறுமி........பதினாறு வயது நிரம்பியபைங்தொடி, எழில் ஒழுகும்பூங்கொடி. அழகான உருவம் அன்பானநோக்கு........அன்னத்தை ஒத்தநடை. மின்னல் குலத்தில் விளைந்ததோ? வான்வில்லின் குலத்தில் பிறந்ததோ? கவிஞரின் கற்பனையே உருவம்பெற்றதோ? பொன்னின் உருக்கிப்பொலிந்ததோ? மலர்க்கூட்டமோ? என்றையுறும் வண்ணம் அமைந்த உருவம். எழிற்கருங்கண்கள்.

ஆம் அவள் வாட்டமுறக்காரணம் கணவன் இறந்தான்........நாயகக்கிழவன் போந்தான்........கிழவனா? கணவன்........அந்தோ! அந்தோ!! மிகக் கொடியது.

எழிற்கருங்கண்மலர். அதற்கெதிரான குழிந்த கன்கள். தாமரைவதனம்! ஐயோ அதனழகைக்கெடுக்க வந்த அனுமந்தமுகம். ஒரு சிறு மணியிடை. அந்தோ! அதைப்பழிக்கப்பருத்த தொந்தி. சுவைதருங் கனிவாய். மூடவைதீகமே! அதற்கெதிரான எச்சில் வழியக் குறட்டைவிடும் வாய். ததும்பிய இளமை, ஏ! தமிழுலகே தங்கியமுதுமை எழுச்சியுற்றகாதல் ஏ! தமிழா! வழிந்தோடிய காமம்.

இவைகளே அம்மடந்தைக்கும் அவளின் மணவாளக்கிழவனுக்கும் உள்ள பொருத்தங்கள். அவள் அக்கிழவனுடன் ஓராண்டே வாழ்ந்தாள். வாழ்ந்தவள் இன்புற்றிருந்தாளா? இல்லை. அவள் அகத்தின்கண் அளவற்றதுன்பமே குடிகொண்டிருந்தது. மணமுடிந்த நாள்முதலாய் அவள் இன்பம் நுகர்ந்தாளில்லை. கண்ணீர்ப்பெருக்கால் கவின்உடை நனைத்தாள். காதலுந்தானும் கனலும் புழுவுமாய் ஏங்கினள். தார்தரித்த அந்நங்கை தயங்கி அழுதாள். நரைத்தலை சோர்ந்த நாயகனை எண்ணிக்கண்ணீர் உகுத்தாள். தொண்டுகிழவன் தழுதழுத்தகுரலில், கண்ணே! என்பான். கண்ணென்ற சொல் காதில்விழுந்ததும் எண்ணமெல்லாம் எண்ணுவாள்.

அவள் 'எண்ணக்கடலில் எழுந்த காதற்கப்பல் பணம் என்ற பெரும்புயல் காற்றினால் எதிர்க்கப்பட்டு நொறுங்கி மூழ்கிற்று. அவள் தேர்ந்தெடுத்த அழகன் அபலையாக்கப்பட்டான் சாதிப்பேயின் தலைவிரிகோலத்தாண்டவத்தினால். "அவள் தலைவிதி" எனக் கழன்றனர் கற்றோரும் மற்றோரும். தலைவிதி எதற்கு முளதோ? விதியை மதியால் வெல்லலாம் என்பதை அறிந்திலரோ? ஆனாலும் என்செய்வது பெற்றோரின் பொருளாசையும், பார்ப்பனியத்தால் ஏற்பட்ட சாதிக் கட்டுப்பாடும், அவளது அழகோடுகூடிய வாழ்வைப் பாழாக்கிற்று.

கடவுளின் பேரால் மனிதரை ஏமாற்றி வாழுங் கூட்டத்தினரின் வைதீக போதனையால் அவள் நல்லுடை யணியாவண்ணம் தடுத்தது. திலகமிடா வண்ணம் கெடுத்தது. விதவை என்றபட்டம் விரும்பிக் கொடுத்தது. துயரக்கணையைத் தொடுத்தது. என்னென்றியம்புவது பெற்றோரின் மடமையை? யாதென்றுரைப்பது கைம்மைக்கொடுமையை?

மறுமணந்தான் உண்டா மங்கை நல்லாள் இன்புற? சீ என்றிகழப்பட்டாளே அச்சீரிளமங்கை!

அந்தோ! நாட்டினரே! இன்னுமா உறங்குகின்றீர். பெண்களின் ஓலத்தைக் கேட்டிலீரோ? கைம்மைக்கொடுமையைக் கண்டு கலங்கீரோ? விதவைப்பட்டத்தை விரும்பி, அளிக்கின்றீரே! மனைவியிறந்தால் மறுதாரம் மணம் புரியும் நீ தங்கள் மங்கையரின் மறுமணத்தை வெறுப்பது நன்றோ?

ஏ! தமிழா! உனது பகுத்தறிவு எங்குபோய் பதுங்கிவிட்டது. பெண்ணுலகத்தின் கதியை நீ ஏன் கவனிக்கவில்லை. எத்தனைநாளைக்கு பிறருக்கு அடிமையாகவாழப் போகின்றாய்? எத்தனைநாளைக்கு சுயமரியாதை யற்று வாழப்போகின்றாய்? எத்தனை நாளைக்கு மூடவைதீகத்தில் உழலப்போகின்றாய்? ஐவருக்கும் தேவி அழியாப்பத்தினி என்றால் 'ஆம்' என்று தலையசைக்கின்றாய். "அது எப்படி" என்றுகேட்கும் பகுத்தறிவு வாதியை நாஸ்திகன் என்கிறாய்.

ஏ! வீரப்புதல்வா! தலைநிமிர்ந்துபார் மேனாடுகளை ஆங்கு தழைத்தோங்கி நிற்கின்றது பெண்களுரிமை! அதனால் அவை அடைகின்றன மேன்மை.

ஆகவே செந்தமிழ்ச்செல்வா! மங்கையர் தான்நம் நாட்டின் பொக்கிஷம் என்பதை மறவாதே, அவர்கள் வாழ்வைக்கெடுக்காதே! மறுமணத்தை மறுத்து அவர்கள் இளமையைப் பலியிடாதே.

---

**ரோமாபுரி ராணி** (10-ம் பக்கத் தொடர்ச்சி.)

நான் அழைத்தடுக்க சைலானசை, ஒப்புக்கு மாலையிடுகிறேன். அதுசெய்தால், உனக்கு வர இருக்கும் ஆபத்து, அவன் தலைமீது சாயும்" என்று மெசாலினா கூற, மடமன்னன் நம்பி, மணவினைக்கு ஏற்பாடுசெய்தான். மணமும்நடந்தது. மாளிகையிலிருந்த பொருள்கள், ஆட்கள், சைலானஸ் மனைக்குக் குடியேற, மெசாலினா, சைலானசின் சயனக்கிருகம் சேர்ந்தாள்! அரசன் அதுசமயம் வேற்றூர் சென்றிருந்தான். இங்கு, கொள்ளை! கொள்ளை!! கொள்ளை!!!

"கேட்பவர், பார்ப்பவர் அற்றஇடம் கேளிக்கைக்கு மிக ஏற்ற இடம்" என்றாகிவிட்டது சைலானசின் வீடு.

இது, மெசாலினாவின் மாஜி காதலர்களுக்கு மனவேதனையைத்தந்தது. மன்னனிடம், இருவர் விரைந்துசென்று, விஷயத்தைக்கூறினர். விஷமென ஏறிவிட்டது வேந்தனுக்குக் கோபம். விரைந்தோடிவந்தான் தலைநகருக்கு. தலைமறைவாகத்திரியலானான் சைலானஸ். ததளித்தாள் மெசாலினா. பிடித்திழுத்து வரச்செய்தான், பாதகப்பட்டாளத்தை! மெசாலினாவின் மையலுக்கு இரையானவர்கள், மன்னனின் ஆணைக்கு இரையாகினர்; இறந்தனர். மன்னனின் மனம் இருக்கும் நிலைதெரிந்து கொண்டான், மெசாலினாவின் மாஜிவேலைக்காரனொருவன் அரசிமீது வஞ்சந்தீர்க்க முனைந்தான். மெசாலினா, சிங்காரத்தோட்டமொன்றில் கண்களில் நீர்புரள, தலைமாட்டில் தாயார் அமர்ந்துகொண்டு, "ஐயோ!" என்று அலற, இனி வாழ்வு இல்லையென்று தீர்மானித்து, இன்பரசக்கடலில் நீந்தியநாட்களை நினைந்தழுதுகொண்டிருந்தாள். பணியாள் பகட்டமாகப் பேசினான். பாராள்வோனின் கோபத்தின் எதிரொலியை அதனால் அறிந்தாள் மெசாலினா. சிறு ஈட்டியை எடுத்தாள். நெஞ்சிற் செருகி மடியத்துணிந்தாள். ஆனால், கைநடுங்கிற்று, கருத்துக்குழம்பிற்று, கண்ணீர், கரைகெட்ட நதியென்றாகிவிட்டது, காவலாள் கண்டான், தனது கட்கத்தை வீசினான், மெசாலினா மாண்டாள்.

மெசாலினா மாண்டசெய்தி மன்னனுக்குத் தெரிவிக்கப்பட்டது. அந்த நேரத்தில் அவன், உண்வருந்திக்கொண்டிருந்தான். அவன் பசி அவனுக்கு! தலையசைத்தான், ' திராட்சைரசம் எங்கே என்றான், கொண்டுவந்தனர், குடித்தான்!

தேவை.

மாதம் ரூ 25/-சம்பளத்தில் அனுபவமும் செல்வாக்கும் உடைய ஏஜண்டுகள் உடனே தேவை. மற்ற விபரங்களுக்கு 0-1-6 ஸ்டாம்பு அனுப்பி தெரிந்து கொள்ளவும்.

காஞ்சி நிதி லிமிடெட்,
காஞ்சிபுரம்.

திராவிடநாடு

ஞாயிறு] 26—4—42 [காஞ்சி

# காந்திஸ்தான் மர்கயா!

அந்தக் குதிரை மிகப்பொல்லாதது! ஏறிவந்தவர் சிறிது சிரமபரிகாரம் செய்துகொள்ள கீழே இறங்கினர், அங்கு மிரண்டு பார்த்தது, கனைத்தது, காலை உதறிற்று, வாலைக்கட்டிக்கொண்டு பிடித்தது ஓட்டம்! கூப்பிடுகிறார் குதிரையை, வந்தால்தானே! மிரட்டுகிறார், சட்டைசெய்தால் தானே! பரிவுடனழைத்தும் பரிவரக்காணோம். பாதையிலே நின்று பதறுகிறார்; பக்குவமிழந்தோமே என்று பரதவிக்கிறார். ஆற்றுவார் இல்லை, தேற்றுவார் இல்லை, அலறுகிறார் அந்தோ!

யார் அவர்? என்பது பிறகு கூறுவோம், ஒரு குதிரையை இழந்ததற்காகவா இவ்வளவு சோகம் பிறந்தது என்றெண்ணிச் சந்தேகிப்பவருக்கு முதலிற் சில கூறுவோம். இந்தியாவைத்தாக்கிய கிரேக்க வீரர் அலெக்சாண்டர், ப்யூசிபாலெஸ் என்ற மதிநுட்பமும் வலிவும் பெற்ற வனப்பான குதிரையிடம் அதிகமான பரிவு கொண்டவர். அது இறந்ததும், உலகை ஒரு குடைக்கீழ் ஆளவேண்டும் என்ற அவருடைய இலட்சியமே இறந்தது, அவர் சித்தரித்த மண்டலங்களிலே கிரேக்கராட்சியே கவிழ்ந்தது. ஒரு குதிரையை இழந்தார், அவரது குறியே கெட்டுவிட்டது! அத்தகைய சரித்திர கீர்த்திவாய்ந்த குதிரைகள் பலப்பல! தேசிங்குராசனின் பாராசாரிக் குதிரை, பாமரரும் தெரிந்துக் கொள்ளும்படியான பிரக்யாதி பெற்றுவிட்டதல்லவா! சரித்திரத்திலோ, கவியின் கற்பனையிலோ இடம்பெற்றுவிட்டால், மண்ணோ மலரோ, கரியோ, பரியோ, காடோ, மேடோ, எதுவும், மக்கள் உள்ளத்திலே இடம்பெற்று விடுகிறது!

முன்னால் இருவர் தொட்டிழுக்க, பின் இருந்து சிலர் தள்ள, "மாதங் காதவழி" சென்ற காளிங்கராயன் குதிரையைப்பற்றிக் கவிகாளமேகம் கூறினார். இன்றும் அக்கவிதை அறிந்தோர் கண்முன் அக்காட்சி நடப்பது போலத் தோன்றும். யுத்தகளத்திலே பிரிட்டிஷ் மன்னனொருவன், தனது குதிரை இறந்துபட, மேலும் போரிடப் புரவிமீதேறத் துடித்து, "ஒரு குதிரை! ஒரு குதிரை! ஒரு ராஜ்யத்துக்காக ஒரு குதிரை தேவை" என்று கூவினான் என்று கவி ஷேக்ஸ்பியர் கூறியுள்ள வாசகம், படித்தோர் ருசித்து, கேட்டோர் களித்து போற்றும் பொருள் தருவது!

இங்ஙனம் பூமான்களின் பரிவுக்கும் புலவர்களின் சிந்தனைக்கும் விருந்தாக நின்ற புரவிகளைக்காட்டிலும், நாம் மேலே கூறியுள்ள புரவி, முக்கியமானது. இப்புரவி, கற்பனை. கதைகூறுவதில் கைதேர்ந்தவரென, கட்டியங்கூறுவோர் கூறும், கனமாக இருந்த ஆச்சாரியாரின் உவமை உரையில் உற்பத்தியானது! நந்தம் நாட்டு அரசியலில், நாம் மறக்கமுடியாத நகைச்சுவை நல்கும்புரவி!

கேண்மின், விளக்கம். ஆச்சாரியார், பதவியை விட்டு வெளிவந்ததும், பேசுகையில் சொன்னார், "நாங்கள் பதவியை மீண்டும் பெறமாட்டோம் என்று எண்ணிவிடாதீர்கள். குதிரைமீதேறிக்கொண்டு போகையில், இளைப்பாற, சமயல் செய்துண்ணவேண்டி, கீழேஇறங்கி இருக்கிறோம். குதிரை கூப்பிட்டஉடனே வரும். மீண்டும் சவாரிசெய்வோம்" என்று.

ரசமான கற்பனை! பதவி ஓர் குதிரைக்கு உவமை, மந்திரி, அதன்மீதேறிடும் ஆணழகன்! கூப்பிட்ட நேரத்தில் குதிரை வரும் என்றதன் கருத்து, கேட்டதும், மீண்டும்மந்திரிப்பதவி கிடைக்கும் என்பதாகும். அவரது கற்பனை விசேடத்தைவிட, அவருக்கிருந்த ஆழ்ந்த நம்பிக்கை கவனிக்கத்தக்கது. அப்போதுதான் அவரது இன்றைய இரங்கத்தக்கநிலைமை நன்கு விளங்கும்.

கூப்பிட்டநேரத்திலே குதித்தோடி வரக்கூடிய குதிரை எங்கே? அதன் மீதேறிவந்த வீராதிவீரர் எங்கே? வீரர் விம்முகிறார்! குதிரை, குறும்புத்தனத்தினால், நாலுகாற் பாய்ச்சலில் போயேவிட்டது. கூப்பிடுகிறார், புலம்புகிறார், வரக்காணோம் குதிரையை! இத்தகைய குதிரையையோ, இதன்மீதேறிவந்து, இடையே அதனை இழந்த இளித்தவாயரையோ, எங்ஙனம், அரசியல் வட்டாரம் மறக்கமுடியும்!

பதவியை விட்டதும், குதிரையைவிட்டுக் கீழே இறங்கியதும் ஆச்சாரியார் கொண்டிருந்த நம்பிக்கை அவலமாயிற்று. கோபக்குரலிற் கூப்பிட்டாலும், தாபக்குரலிற் கூவினாலும், சோகத்தோடு கூப்பிட்டாலும், சொந்தம் பாராட்டிக்கூப்பிட்டாலும், அந்தப் பொல்லாத குதிரை வரமறுக்கிறது, வாய்நோய் கொண்டு வதைகிறார் வகைமறந்த வேதியர்!

குதிரைவரமறுப்பது மட்டுமல்ல, வேடிக்கை! அதன்மீது வேறுஆள் சவாரிசெய்கிறார்! அவர் கீழே இறங்கவில்லை, இறக்கக்குதிரைக்கும் விருப்பமில்லை. பதவி, கவர்னர் மன்றத்தாரிடம் இருக்கிறது, ஆச்சாரியாருக்குக்கிடைக்குமென்று ஆரூடம் கூற யாரும் முன்வரவில்லை. முன்னாள் முறுக்கு முறிந்துவிட்டது, இந்நாள் ஏக்கமே மேலிட்டு விட்டது.

கேளுங்கள் அவர் சென்னையில் 22-ந்தேதி பேசுகையில் கூறியதை! ஒரு ஆங்கிலேயர் தலைவர் அந்தக்கூட்டத்திற்கு. அதையும் பொருட்படுத்தாது ஆச்சாரியார், அடிவயிற்றில் அறைந்துகொண்டு அலறும் அம்மாமிபோல் பேசியுள்ளார், "**அவர்கள் ஏறிய குதிரைகள் அவர்களை இறங்கவிடவில்லை. மதனப்பள்ளி போனாலும், சித்தூர் போனாலும், எங்குபோனாலும் குதிரை விடவில்லை**" என்று ஆச்சாரியார் கூறுகிறார். அதாவது ஆங்கிலேய அதிகாரிகளிடம் போய்ச்சேர்ந்த மந்திரிப் பதவிகள், இவரிடம் மீண்டும் வரவில்லையாம்! எவ்வளவு பரிதாபம் பாருங்கள்! கர்வபங்கம் எவ்வளவு நேரிட்டிருக்கிறது என்பதைக்கூர்ந்து நோக்குங்கள்! எந்தக்குதிரையை, கூப்பிட்ட உடனே வந்துசேரும் என்று ஆச்சாரியார், விரசத்துடன் கூறினாரோ, அந்தக்குதிரை, வேறு ஆட்களுடன் வேற்றார்கள் போகவும் விரும்புகிறது, இவரைச்சட்டை செய்ய மறுக்கிறது, என்று இவரே கூறுகிறார்! இஃதன்றோ காலம் புகட்டும் கருத்துள்ளபாடம்! நீதி நின்று வெல்லும், ஆனால் நிச்சயமாக வெல்லும் என்றனர் ஆன்றோர். உண்மை! இதோ, ஆணவத்துடன், அநாயாசமாகக் கூப்பிட்டால்போதும் குதிரை ஓடிவரும் என்று கூறிய ஆச்சாரியாரே, கூப்பிட்டுக் கூப்பிட்டு அலுத்தேன், குதிரை வேறு ஆட்களைவிட்டுப்பிரிய இசைய

வில்லை என்று கூறவேண்டி நேரிட்டது என்றால், நீதியின் வெற்றியல்லவா இது என்று கேட்கிறோம்.

இதுவரை, சற்று மறைத்துப் பேசிக்கொண்டிருந்த மாஜி முதலமைச்சர், இம்முறை, மிக வெளிப்படையாகப் பேசியும்பார்க்கிறார். வைத்தியரிடம் வியாதியின் மர்மத்தையும், வக்கீலிடம் வழக்கின் உண்மையையும் கூறிடவேண்டு மென்பார்கள், அதுபோல் வெள்ளையரிடம் பதவி விருப்பத்தைப் பளிச்செனத் தெரியப்படுத்தித்தான் விடவேண்டும் என்று ஆச்சாரியார் கருதினார்போலும்! இல்லையேல், இலஜ்ஜையை அவர் அவ்வளவு பகிஷ்கரித்திருக்கக் காரணமில்லை!!

இவை அவர் கூறியவை; "இங்கு (சென்னை மாகாணத்தில்) வேறு சர்க்கார் இருக்கவேண்டும். இதற்குமுன்பு இதை நான் சொல்லவில்லை. இந்தியப் பிரச்னை தீரவேண்டுமென்றும், மத்தியில் தேசீய சர்க்கார் இருக்கவேண்டுமென்றும் சொன்னேன். பின்னர்தான் மாகாண சர்க்காரைப்பற்றி நான் ஆலோசித்தேன், இதைப்பற்றி நான் பேசும்போது, இது என் சொந்தவிஷயமாகக் காண்பதுபோலத் தோன்றுகிறது: நான் ஆளுவதற்கு ஆசைப்படுவதுபோல் நீங்கள் நினைக்கலாம், எனக்கு அந்த ஆசைஇல்லை"

ஆசையற்ற இவர், அசுவம் அயலாரிடம்போனது பற்றி ஆயாசப் படுவானேன்? அதை மீண்டும் தருக என்று ஆங்கிலசர்க்காரிடம் அர்ச்சித்துக்கேட்பானேன்?

விஷயம்இது. முதலிலே பூரண சுயராச்யம்கேட்டார், பிறகு சுயராச்யம் தருவதாக வாக்குறுதி தருக என்று கேட்டார் பிறகு, போர்நோக்கம் புகல்க என்று கேட்டார், பிறகு சிறைபோகிறோம் என்றார், பிறகு வெளிவந்து வேண்டுகோள் விடுத்தார், அஹிம்சை ஆகாது என்றார், தேசீய சர்க்கார் கேட்டார், கூட்டு மந்திரிசபைக்குத் தூபமிட்டார். கிரிப்சிடம் காவடி தூக்கினார், இவையாவும் இல்லை, இல்லை, என்றாகிவிடவே, இருந்த இடத்திலாவது மீண்டும் அமர்த்துங்கள் என்று இப்போது கெஞ்சுகிறார்! எவ்வளவு பரிதாபகரமான வீழ்ச்சி! ஏனோ பதவிமீது இத்துணை பிரேமை! பத்தும் பறந்துவிட்டதே!!

குதிரை, இவ்வளவு "ஞானோபதேசம்" புரியக் கூடியதென்று நாம்எண்ணினதேயில்லை. ஆனால் இதோ காண்கிறோம், பதவிக் குதிரை அவரை எவ்வளவு பாடுபடுத்தி, பாடங்கற்பிக்கிற தென்பதை!!

"காங்கிரஸே தேசம், தேசமே காங்கிரஸ்" என்று கனல்கக்கும் பேச்சுப்பேசிய ஆச்சாரியார், கண்ணீர் புரளக் கூறுகிறார், "காங்கிரஸ், லீக், ஜஸ்டிஸ் கட்சி, தாழ்த்தப்பட்ட லீக், இந்துமகாசபை, மகாராஷ்டிர லீக், கக்சார்கள், அஹ்ரார்கள், எல்லோரும் சேர்ந்து இந்த யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாகக் கூறினால் ஒவ்வொருவரும் அதை நன்கு அறிந்து கொள்ளமுடியும். அப்போதுதான் யுத்தம் மக்களின் யுத்தமாக மாறும்' சர்க்கார், அறிக்கையல்ல, ஆச்சாரியார் சொற்பொழிவு! அவருடைய வாயிலிருந்து தான், மனதிலிருந்து வருகிறதெனக் கூற நமது மனம் இடந்தர மறுக்கிறது. லீக், ஜஸ்டிஸ் கட்சி, தாழ்த்தப்பட்டவர் லீக், என்ற இவைகள் கிளம்புகின்றன! நாங்களன்றி வேறுயாருக்கு நாடாளும் உரிமை உண்டு என்றுரைத்த உக்கிரசேனர், எவ்வளவு அடக்க ஒடுக்கத்துடன், பரிவு பாசத்துடன், நம்மவர்களையும் அழைக்கிறார் பாருங்கள்! அவருடைய கருத்து எதுவாகவேனும் இருக்கட்டும், சாணக்கிய சாத்திரப்படி சமயத்தில் சகலரையும் சரிப்படுத்த வேண்டும் என்ற சாகசமாக இருக்கட்டும், நமக்குக் கவலையில்லை, கவிழ்ந்த தலையும், நீர்மல்கும் கண்களும், கூப்பிய கரங்களும், குழையும் பேச்சுமாக அவர் நிற்கக் காண்கிறோமே, அதுபோதும் நமக்கு, வேலை நமக்களிக்கும் வெற்றி அது! எட்டு நாளில் சட்டம்செய்வேன் என்று அன்றுரைத்த ஆச்சாரியார் எங்கே? செல்வத்தையும் குமார இராசாவையும் கேலி செய்த கூட்டத்தைச் சட்ட சபையில் வைத்துக்கொண்டு பட்டங்கட்டியாண்ட பிரதாபம் எங்கே? சர்க்கார், காங்கிரஸ், இவை இரண்டொழிய வேறுகட்சிகளுக்கு இடமில்லை என்றுரைத்த இறுமாப்பெங்கே? எம்மை அசைக்க எவருளர் என்றுரைத்த வீறாப்பு எங்கே? பட்டத்துக்குரியவர்கள், இன்னும் பன்னெடு ஆண்டுகட்கு யாங்களே என்றுபேசிய பூரிப்புஎங்கே? லீகும், ஜஸ்டிசும், இருக்கின்றன என்பதும், எந்தகைய ஏற்பாடு நடைபெறுவதாயினும், அவைகளின் ஆதரவு பெற்றாகவேண்டு மென்பதும், இன்றுணர்ந்தார் ஆச்சாரியார். இஃதுநமக்கோர் இணையற்றவெற்றி என்போம். இதுமட்டுமல்ல, மேலும் உண்டு.

பாகிஸ்தான் கோரிக்கையை ஏற்கமுடியாது. இந்தியா இந்தியருக்கே! பாகிஸ்தானுக்கு இணங்குவதைவிட சுயராச்யத்தை இழப்பதுமேல், கடைசிகாங்கிரஸ்காரர் இருக்கும்வரையில் பாகிஸ்தானை எதிர்த்துப் போராடுவோம். பாகிஸ்தான்,

பாரதமாதாவை வெட்டுவதாகும்
பசுவை அறுப்பதாகும்
குழந்தையைக் கூறுபோடுவதாகும்
வீட்டைப் பிரிப்பதாகும்
அதற்கு ஒப்புக்கொள்ளமாட்டோம்.

இந்தியா ஒரேநாடு, அதனைத்துண்டாடச் சம்மதியோம் என்று ஆச்சாரியார், இதுவரை பாகிஸ்தானைப் பற்றிப் பேசிப்பலமாகக் கண்டித்து வந்தார். ஜனாப் ஜின்னாவைப் பலமுறை தூற்றியிருக்கிறார். அறிவை இழந்து காயிதே அஃலம் பேசுகிறார் என்று இழிவாகப்பேசினார். அக்பரும் அவுரங்கசீபும் தோற்றுவிட்டனர், இந்த ஆசாமிமட்டும் ஜெயிப்பாரோ என்று கேலிசெய்தார்.

லீகுக்குச் செல்வாக்குக் கிடையாது என்றுரைத்தார். முகமதலி ஜின்னாவை, வேலூர் உபயதுல்லாவை விட்டுத் திட்டச்செய்து, நாகை மொய்தீன் மரைக்காயரைக்கொண்டு நாங்கள் பாகிஸ்தானை வேண்டோம் என்று பேசச்செய்தார்! ஆயிரக்கணக்கான கூட்டங்களிலே, அண்டம் அதிரக் கூறினார், பாகிஸ்தான் என்ற பேச்சைக் காதால் கேட்பதும் தவறுஎன்று! அதைக்கேட்ட அடியார்கூட்டம் ஆர்ப்பரித்து, முஸ்லீம் லீக் தலைவர்களை நாக்கில் நரம்பின்றித்தூற்றின. எவ்வளவு ஏளனம்! எத்துணை கண்டனம்! காங்கிரஸ்தான் தவிர வேறொன்றும் கூடாதுஎன்று செய்த கர்ச்சனை எவ்வளவு!

இன்று இவையாவும், போயின! தூற்றியவர் தொழவருகிறார், கண்டித்தவர் கனிவுடன் பேசுகிறார், எதிர்த்தவர் சமரசம் கூறுகிறார், ஆச்சாரியார், பாகிஸ்தானை ஆதரிக்கிறார்! ஆதரித்துத் தீரத்தான்வேண்டும் என்று தமது சகாக்களுக்குக் கூறிவிட்டார். பாகிஸ்தான் திட்டத்தை ஒப்புக்கொள்ளும்படி காங்கிரசைக் கேட்டுக்கொள்கிறார், அதற்காகக் காங்கிரசில் போரிடவுங் கிளம்புகிறார்!

**23—4—42** நமது நாட்டுச் சரித்திரத்தில் பொன்னால் தீட்டப்பட வேண்டிய நாளாகும்! கருப்புக் கண்ணாடியாரின் கர்வபங்க நாளாகும்அது! பாகிஸ்தானை எதிர்த்த முண்டங்கள், முகத்தைத் தொங்கவிட்டுக் கொள்ளவேண்டிய நாளாகும். பிளாசி, பானிபட், வாடர்லூ, முதலிய பலப்பலசரிதப் புகழ்பெற்ற சம்பவங்கள் போன்றதாகும். வெள்ளைக்கொடி ஏந்தி வேதியர் வெளிவந்த நாள்! பூர்ண கும்பம் எடுத்துக்கொண்டு புறப்படுவோம் ஜனாப்ஜின்னாவை வரவேற்க என்று பூசுரர் கூறிடவேண்டிய நிலைமையை உண்டாக்கிய நாள்! ஆணவம் அழிந்த நாள்! அறிவு உதயமான நாள்! ஆச்சாரியார், ஜின்னாமுன் மண்டியிட்டு நிற்கும் நாள்! பாகிஸ்தானாவது கிடைப்பதாவது, காங்கிரசாவது அதற்கு ஒப்புக்கொள்ளுவதாவது என்று எல்லாம் தெரிந்தவர்கள் போல் பேசித்திரிந்த இங்கி

தந் தெரியா ஏமாளிகளே! வேதகால முதற்கொண்டு இராமர், அரிச்சந்திரர், பாண்டவர் முதலியவர்கள் காலத்திலிருந்து ஒரே நாடாக இருந்துவந்த பாரதபூமியைப் பங்குபோட யார் சம்மதிப்பார்கள் என்று புராணம் பேசிய புலவர்களே! முஸ்லீம்களும் அன்னியர்களே, அவர்கள் இங்கு ஆள இடந்தரோம் என்று பொச்சரிப்போடு பேசிய பேதையரே! மெஜாரடிதானே ஆட்சி செலுத்தவேண்டும், அதுதானே ஜனநாயகம், இந்து இனந்தானே மெஜாரடி, அதனிடந்தானே முஸ்லீம் மைனாரடி அடங்கி இருக்கவேண்டும் என்று அகந்தை கொண்டு ஆர்ப்பரித்த அசடர்களே! வாளெடுத்தும் போரிடுவோம், வழங்க மாட்டோம். பாகிஸ்தான் பூதம் பிரிட்டிஷாரால் சிருஷ்டிக்கப்பட்டது, அதைப் புதைத்துத் தீரவேண்டும் என்றுபேசிய ஆரிய தாசர்களே! ஜனாப்ஜின்னா, ஏகாதிபத்தியத்தின் ஏவலர், அவரை ஏற்கோம் என்றுரைத்த இஞ்சி தின்ற மந்தியென்று நின்றுலவிய பேர் வழிகளே! இதோ, உங்கள் தலைவர், ஆச்சாரியார், பணிந்து பயபக்தியுடன் நின்று, பாகிஸ்தான் கொள்கைக்கு ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும் என்று கூறிவிட்டாரே, உங்கள் முகத்தை எதனால் மூடிக்கொள்ளப்போகிறீர்கள், ஏதேதோ பேசிய உமது நாவை எதுகொண்டு சுத்தம்செய்து கொள்ளப் போகிறீர்கள், அவமானந் தாங்காது ஆளுக்கொரு முழக்கயிறு எடுத்துக்கொண்டு மரக்கிளைகள் தேடுவதா, அல்லது ஆச்சாரியார் மீது பாய்ந்து அவரை வீழ்த்துவதா, என்ன செய்யப் போகிறீர்கள், எங்கே உங்கள் வீரப்பேச்சும், காரக் கண்டனமும், சூரச் சூளுரையும்!

23—4—42ந்தேதியில், சென்னை சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக்கூட்டத்தில், ஆச்சாரியார் கொண்டு வந்து பேசிய தீர்மானத்தில், "ஐக்கிய இந்தியாவிலிருந்து சில குறிப்பிட்டபிராந்தியங்கள் அந்த வட்டாரத்துக்குட்பட்ட மக்களின் சம்மதத்தின்பேரில் பிரிந்திருக்க உரிமை உண்டு என்பதை அங்கீகரிக்கவேண்டும். இதுவே முதல் நிபந்தனையாக இருக்கவேண்டும் என்று முஸ்லீம் லீக் வற்புறுத்துவதாலும் இந்தச்சமயத்தில் இந்திய ஐக்கியத்தைப்பற்றிய சர்ச்சையை வளர்த்துக்கொண்டிருப்பது மிகவும் புத்தித்தாழ்வான காரியமாதலாலும், இரண்டாம்படியான இந்தக்கெடுதலைத்தெரிந்தெடுத்து, லீகானது இந்தக்கோரிக்கையில் பிடிவாதம் காட்டியேதீருமாயின் அதற்கு விட்டுக்கொடுத்து, தற்போதைய நெருக்கடியைச் சமாளிக்க வேண்டும்" என்று இருக்கிறது. இதைக்குறித்து ஐந்துமணி நேரம் விவாதம் நடந்ததாம். தோழர் பிரகாசம் முதலிய சிலர் எதிர்த்தனராம். ஆச்சாரியார் அனைவரையும் அடக்கும் சொல்லம்புகளைச் சரமாரியாக விடுத்தார். "இத்தனை ஆண்டுகளாக லீகையோ, ஜனாப் ஜின்னாவையோ வீழ்த்தக்காங்கிரசால் முடியவில்லை. எனவே லீக் கோரிக்கைக்கு இணங்கித்தான் தீரவேண்டும்" என்று கூறினாராம் ஆச்சாரியார். இந்தப்புத்தி வந்ததுகண்டு நாம் மகிழ்கிறோம்.

ஆச்சாரியார் இந்தத்தீர்மானத்தை அகில இந்தியக்காங்கிரஸ் கமிட்டி ஏற்றுக்கொள்வதற்காகப் போரிடப்போவதாகவும், போரிட்டு வெற்றிபெற முடியுமென்று உறுதி கூறியதாகவும் தெரிகிறது.

தீர்மானத்தை நிறைவேற்றிக்கொண்டார், உடனே, சம்பந்திகாந்தியாரைக்காண ஓடுகிறார்!

முஸ்லீம் லீகை இத்தீர்மானத்தின் மூலம் மயக்கி தேசியசர்க்கார் அமைப்புக்கு இணங்கச்செய்து, பிறகு மெள்ள ஏதாவதோர் சூதுசெய்து லீகைக்கவிழ்க்கலாம் என்று சூட்சிசெய்ய ஆச்சாரியார் முற்படக்கூடும். ஆனால் கொள்கையை ஏற்றுக்கொண்டு, குனிந்துநிற்கிறாரே இன்று, அந்தக்காட்சிபோதும், நமது கண்களுக்கும் கருத்துக்கும், விருந்தளிக்க!

திராவிடத்தலைவர்களே! தோழர்களே! மூன்றாண்டுகளுக்குள் முப்புரிநூலை முகமதலி ஜின்னா வீழ்த்திவிட்டார். பாகிஸ்தானை, பிரிட்டிஷாரும், காங்கிரசும் ஏற்றுக்கொள்ளச்செய்து விட்டார். என்னே அவரின்வீரம்! திராவிடர்களே! இஸ்லாமியர் பெறும் இன்பம் நாமும்பெற, நாம் இனியாவது முனையவேண்டாமா? திராவிடநாடு, என்றென்றும் தனி நாடாக இருந்தது, இலக்கிய, சரித ஆதாரம் இருக்கிறது. இனி எழுமின் தலைவர்காள்! கூடுமின் தோழர்காள்! கொட்டுமின்முரசு! பாகிஸ்தான் ஜிந்தாபாத் என்று பாடுமின், திராவிடநாடு திராவிடருக்கே என்ற நமது முழக்கத்தையும் முப்புரிநூலோரும் ஆங்கிலேயரும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும் என்பதை எடுத்துரைப்பீராக! ஆரியம் அழிக! திராவிடம் வாழ்க!!

பார்ப்பனத்தலைவர் பறிகொடுத்த பரிமீது பாங்கி ஏறிச் சவாரி செய்வதைக்கண்டு பதைபதைத்து, அதனைமீண்டும்பெற, ஆச்சாரியார், பாகிஸ்தான் ஜிந்தாபாத் என்ற நமது முழக்கத்துக்கு முடிவணங்க முன்வருகிறார்! அது நமக்கோர் வெற்றி. பாகிஸ்தானை ஒப்புக்கொண்டபிறகு. திராவிடநாடு கூடாதென்றுகூற யாரே துணியமுடியும்! வாள் வலிவால் சித்தரித்த மண்டலத்தை, இழந்த இஸ்லாமியர் இன்று தமது கட்டுப்பாட்டினால், எழுச்சியினால், தலைவர் ஜின்னாவின் தீரத்தால், திரும்பப்பெறமார்க்கம் கிடைத்துவிட்டது. பல வடநாட்டு வல்லரசுகளுக்குத் தலைவணங்காது வாழ்ந்த நாம், வஞ்சனைக்காரரிடம் வளைந்தோம், வாழ்வை இழந்தோம். பாகிஸ்தான் ஜிந்தாபாத் என்ற பாடலின், இரண்டாம் அடி, திராவிடநாடு வாழ்க, என்றுதான் இருக்கமுடியும்! எனவே எழுமின், போரிடுமின், வெற்றிக்கொடி நாட்ட விரைமின் என்று திராவிடருக்கு நாம் கூறுகிறோம். சாந்திஸ்தான் மார்க்கம், என்பது இப்போது மிகத்தெளிவாகி விட்டது!

## தோழர் G. D. நாயுடுவின் பேருபகாரம்

கோவை மோட்டார் மன்னர் தோழர் G. D. நாயுடு தமது தொழிற் சாலையிலுள்ள வர்கட்கு கனிவுடன் ஒரு நூறாயிரத்திற்கு மேற்பட்ட வெண்பொற் காசுகளை போனசாக வழங்கினார் என்ற செய்தி கேட்டு இறும்பூதெய்துகிறோம். விஞ்ஞான விற்பன்னராம் தோழர் நாயுடு அவர்கள் தொழிலாளர் கிளர்ச்சிகளும் துப்பாக்கிப் பிரயோகமும் நடந்து கொண்டு இருக்கும் இந்நாளன்று இன்னல் போக்கி இதந்தந்த இத்தகைய வள்ளற்றன்மையைக் காட்டினமை பற்றிக்களிக்கிறோம் பாராட்டுகிறோம்.

### வேவல் உறுதி

சர். கிரிப்சுக்கு எழுதிய கடிதத்தில், ஜெனரல் வேவல், இந்தியாவை எதிரியின் தாக்குதலிலிருந்து காப்பாற்றமுடியும் என்று உறுதி தெரிவித்திருக்கிறார்.

### ஜப்பானியக் கைதிகள்!

நேச நாடுகளிடம் சிறைப்பட்டுள்ள ஜப்பானியரை, விடுவிக்கவும், அதற்கு ஈடாக, ஷாங்கேயில் ஜப்பானியரிடம் கைதாகிஉள்ள நேசநாட்டினரை ஜப்பானிய சர்க்கார் விடுதலைசெய்யவும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

### மீன் பிடிக்கிறார்கள்

ரஷியாவுக்குச் சொந்தமான விளாடிவாஸ்டாக்கில், மீன் பிடிக்கும் உரிமை ஏலத்தில் விடப்பட்டதில், ஜப்பானிய சர்க்கார், 14 இடங்களில் மீன் பிடிக்கும் உரிமையை ஏலத்தில் எடுத்தனர்.

### ஈரானுக்கு ரஷிய கோதுமை

ஈரானுக்கு ரஷியா கோதுமை அனுப்பி உதவி செய்திருக்கிறது.

# வலதுகரம் இழந்த வரவேற்புத் தலைவர்.

## திருப்பத்தூர் திருவிளக்கு அணைந்து விட்டது.

### வாணியம்பாடியில் வாட்டம்.

வடாற்காடு மாவட்ட நீதிக்கட்சி மாநாடு, விமரிசையாகத் தொடங்கப்பட்டு, இடையே, இருதயத்துடிப்பைத்தரும் துக்ககரமான சம்பவத்தின் பயனாக, விசனத்தில் வீழ்ந்து, கலைந்தது. களித்துக் கூடினோர் கசங்கிய கண்களுடன் கலையவேண்டிநேரிட்டது: பூரித்தவர்கள் புலம்பவும், ஆவேசப் பேச்சுக்காரர் அழவும், ஆர்வத்தை ஊட்டவந்தவர்கள் அனுதாபந்தெரிவிக்கவுமான, அவஸ்தை உண்டாகி விட்டது.

வடாற்காட்டு வட்டார நீதிக்கட்சி வளர்ச்சியில் மிக்க அக்கரை கொண்டிருந்தவரும், திருப்பத்தூர் திராவிடக் கோட்டையாகத்திகழ திறத்துடன் பணியாற்றி வந்தவருமான, தோழர் பழனிச்சாமி முதலியார், திடீரென இறந்துவிட்டார், மாநாட்டினரின் மனம் வேசலாயிற்று. 19ந்தேதி நீதிக்கட்சி மாநாடு, 22ந்தேதி திருக்குமாரியின் திருமணம், 19ந்தேதி பிற்பகலோ, பழனிச் சாமியார் மறைந்துவிட்டார். 19ந்தேதி காலையில், ஊர்வலமும், மாநாட்டு வரவேற்புரை, திறப்புவிழா, கொடிஏற்றுவிழா, தலைமைப் பிரசங்கம் படத்திறப்புவிழா ஆகியவைகள் முடிந்து, விருந்தும் முடிந்து, மாநாட்டினர் வியர்வையைத் துடைத்துக் கொண்டிருந்த நேரத்தில், மூன்று நாட்களுக்கு முன்னர் வைத்திய சிகிச்சைக்குச் சென்ற தோழர் பழனிச்சாமியார், காலமாகிவிட்டார் என்ற கர்ணகடூரமான செய்தியைக் கேட்க நேரிட்டது. பிற்பகல் நடவடிக்கைகள் சோகத்தில் துவங்கிற்று. அனுதாபத் தீர்மானத்தை மௌலவி ஷர்புதீன், பெரியார், அண்ணாதுரை, அழகிரிசாமி ஆகியோர்கொண்டு வந்து, குலையும் மனதுடன், மறைந்தவரின் அருங்குணங்களை எடுத்துரைத்தனர், திருப்பத்தூரையே துக்கம் கப்பிக்கொண்டது. மறைந்த மணியின் இல்லத்திற்கு, மாநாட்டினரும் மற்றையோருமாக ஆயிர ஆயிரமக்கள் சென்று, துக்கம் விசாரித்தனர்.

மாநாட்டுத்தலைவர், தோழர் T. ஷண்முகம் அவர்கள், மாற்றாருக் கஞ்சாமறத்தமிழர், வைதீகத்தின் வலையை அறுத்தெறிந்த பகுத்தறிவாளர், கடமையைச் செய்யக் கலங்கா உள்ளம் படைத்தவர், கட்டாய இந்தியை எதிர்த்துப்போரிட்டபோது படைத்தலைவராக இருந்து உதவி பல புரிந்தவர், சுயமரியாதைச் சுடரொளியையே வாழ்க்கைக்கப்பலுக்குத் துணையெனக்கொண்டவர், வாஞ்சனையும் வசீகரக்குணமுங்கொண்ட வன்மைத்தமிழர், சிறைக்கஞ்சாச்சிங்கம். அவர், காலையிலே மாநாட்டினருக்கு, உணர்ச்சியும் உரமும் ஊட்டும் தலைமைப்பேருரையை நிகழ்த்தினார் உரையின் பொருளை உணர்ந்த மாநாட்டினர், தோழர் T. ஷண்முகம் அவர்களைத்தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொண்டபோது, பெரியார், சேலம் சேர்மன், திருவண்ணாமலை அரங்கசாமி ரெட்டியார், அண்ணாதுரை ஆகியோர், எடுத்துக்கூறியவைகள், முகஸ்துதி அல்ல என்பதை உணர்ந்தனர். மாலையில், மாநாட்டுத்தீர்மான விவாதத்திலும், முடிவுரையிலும், மேலும் பல கூறுவார், கேட்போம் என்று எதிர்பார்த்திருந்தனர். எதிர்பாராதது நடக்கவே, ஏங்கினர், மனம்வீங்கினர். சில ஆண்டுகளுக்குப்பிறகு மீண்டும் தமிழரிடை வந்து சேர்ந்த தோழர் J. S. கண்ணப்பர் வரவுதந்த மகிழ்ச்சியும் மங்கியது.

வரவேற்புக் கழகத்தலைவர், வக்கீல் தோழர் சாமிநாயுடு அவர்களின் வரவேற்புரையில், நீதிக்கட்சியின் பெருமைகளும். தமிழரின் கடமைகளும் விளக்கப்பட்டதுடன், திராவிடநாடு தனிநாடாக வேண்டிய தன் அவசியமும், நன்கு விளக்கப்பட்டிருந்தது.

தோழர்கள் சாமிநாயுடு, துரைசாமிநாயுடு, ராகவமுதலியார், முதலியவர்கள், தோழர் பழனிச்சாமியாரைத் தமது உறுதுணையாகக்கொண்டு வாழ்ந்தனர், கட்சிக்குத் தொண்டாற்றுவதில் களிப்புடனிருந்த தமது நேயரை இழந்தனர், நொந்தனர். அவர்களைத்தேற்றும் வகை அறியோம்! வரவேற்புக் கழகத்தலைவர் தமது வலது கரத்தை இழந்தார், திருப்பத்தூரில் ஓர் திருவிளக்கு அணைந்துவிட்டது, போதாதோமனம்புண்ணாக என்று எண்ணினோருக்கு வடாற்காடு வாட, 'இத்துடன் இன்னொன்றுங் கேளீர்! வாணியம்பாடி தோழர் சண்முகமுதலியாரும் இறந்துவிட்டார்'' என்று செய்தி தெரிவிக்கப்பட்டது. வளையாத உள்ளமும், கட்சியில் குறையாத பற்றும், வாடாத ஆர்வங்கொண்ட வாலிப வீரத்தைவயோதிக உடலில் வைத்துக்கொண்டிருந்தவர் வாணியம்பாடியார். ஜஸ்டிஸ், ஜஸ்டிஸ், என்று சதாகாலமும் ஜெபித்துக்கொண்டிருந்தவர். அவரும் இறந்துவிட்டார். வடாற்காடு வட்டாரம் இருபெருந்தலைவர்களை இழந்து ஏங்குகிறது. எதைக்கூறி அவர்களைத் தேற்றுவது, எதை எண்ணி நாம் ஆறுதலடைவது என்றே தமிழர் தவிக்கின்றனர். வாணியம்பாடி முனிசிபல் வைஸ்சேர்மென் தோழர் வி. எஸ். விஸ்வநாதம் தந்தையாரும், வடாற்காடு ஜில்லா முதலாவது ஜஸ்டிஸ் மகாநாட்டை வேலூரில் தன் சொந்தஹோதாவில் தனித்து நின்று வெற்றியுடன் நடாத்தி ஜில்லாவிற்கே பெரும் வழிகாட்டியாயும், பால்யம் முதல் தன் சொந்தப் பணத்தின் பெரும் பாகத்தையும், காலத்தையும் தமிழர் முன்னேற்றத்திற்கே அர்ப்பணம் செய்து வந்தவருமான தோழர் வி. ஷண்முக முதலியாரவர்கள் தனது 56-வது வயதில் 18—4—42ல் திடீரென்று முடிவெய்தினார். அவர் மறைவு குறித்து, பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:—

அன்புள்ள தோழர் V. S. விஸ்வநாதம் அவர்களுக்கு, ஈ. வெ. இராமசாமி வணக்கம்.

தங்கள் தந்தையார் எனது நண்பர் தோழர். V. சண்முக முதலியாரவர்கள் முடிவெய்திய சேதி கேட்டு மிகவும் மனச்சங்கடப் பட்டேன்.

அவர் நம் இயக்கத்திற்கு ஆரம்பத்தில் இருந்து தொண்டாற்றிவந்ததுடன் பலவழியிலும் உதவிசெய்து வந்திருக்கிறார். அவரது முடிவானது நம் இயக்கத்திற்கு ஒரு நஷ்டம் என்பது மிகைப்படுத்திக் கூறுவதல்ல உண்மையே ஆகும்.

இயற்கைக்கு நாம் யாவரும் கட்டுப்பட்டவர்களேயாதலால் துக்கப்படுவதில் பயன்இல்லை என்பதோடு தங்களைப் போன்ற பகுத்தறிவாளர்களுக்கு அதிக சமாதானம் எழுதத்தேவைஇல்லை. தயவுசெய்து எனது அனுதாபத்தை ஏற்றுக்கொள்ளக் கோருகிறேன்.

தங்கள் அன்புள்ள

(Sd) ஈ. வெ. ராமசாமி.

**இறுதிச்சடங்கு 1—5—42. வெள்ளிக்கிழமை மாலை நடைபெறும். காலஞ்சென்றவர் உருவப்படம் உயர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் தலைமையில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் திறந்து வைப்பார்கள்**

மறைந்தவர்களின் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். உள்ளம் உடையும் ஊறுகள் நேரிடுகின்றன, உத்தமர்களின் உறுதியைக் கருவறுக்க! எனினும் அஞ்சாது, அயராது, அவதிகண்டு மனதைக்குழம்பவைத்துக் கொள்ளாது, தமிழர், கண்கசங்கிய தோழர்கள், மீண்டும் தலைநிமிர்த்தான் வேண்டும்!

# ரோமாபுரி ராணிகளின் லீலா விநோதம்

விஸல்.

## ஒய்யாரியின் ஓயாமடம்!!

"அழகான உருவம்! ஆசானுபாகு! தேஜசான முகம்! தேன்மொழியோன்! கண்கள் கனிரசக்கலசங்கள்! உனது அழகு கண்டு நான் மெச்சுகிறேன்"

"சக்ரவர்த்தினி! தங்களின் கடாட்சத்தைப்பெற்ற நான் பாக்யசாலிதான்"

"உண்மை! உன் அழகுக்கேற்ற பரிசுதரத்தான் உத்தேசம். ஏன்கூச்சப்படுகிறாய். உட்காரு இப்படி! அரசியின் அந்தப்புறத்தில், உனக்கேன்அச்சம், கதவு சாத்தப்பட்டிருக்கிறது! தோழியர், பஞ்சணைமீது மலர் தூவிவிட்டு வெளியே சென்றுவிட்டனர். விருந்துண்ட அலுப்பால், மன்னர், குறட்டைவிடுகிறார். அது உன் செவிக்கு ஆகாதென்று தான், சங்கீதம், பளிங்குமண்டபத்திலே ஏற்பாடு செய்திருக்கிறேன். வசீகரமிக்க வாலிபனே! வா இப்படி!"

"என்னை ஒருபொருட்டாக மதித்து இங்ஙனம் உபசாரம் செய்வதுகண்டு நான்ஆச்சரியமடைகிறேன்"

"இருக்கும் இளைஞா! உன் அழகைக்கண்டு நான் ஆச்சரியப்படுவதைப் போல!"

"தங்கள் கட்டளையே எனக்கு வேதம்"

"கட்டிலறையிலே, கட்டளைஏது கண்ணாளா!"

"அரசியாரே! நான்கேட்கும் சொற்கள், உண்மையா! இது என்ன விபரீதம்?"

"விபரீதமொன்று மில்லை! வீண்காலம் போக்காதே நண்பா, வீணையிலிருந்து நாதம்பிறக்கும், மலரிலிருந்து மணம்தோன்றும், காதலிலிருந்தோ, எல்லாம் தோன்று மல்லவா! கவி, சித்திரம் ஓவியம், முதலிய பலவும் காதலினின்றும் தோன்றியவை என்பது உனக்குத் தெரியாதா! வெகுவிரைவிலே, அவைகளை நீ தெரிந்துகொள்வாய்! நான் உனக்கு அரசிமட்டுமல்ல ஆசிரியை, ஆமாம்! உனது ஆசை நாயகி!

"ஆ! என்ன வார்த்தை சொல்லத் துணிந்தீர்கள்! என்தலை சுழலுகிறதே! இதென்ன அநியாயம்......"

ஒருசிரிப்பு, ஒரு அணைப்பு, ஒருமுத்தம், மௌனம்; புன்னகை, புதுஉலகம் பிறக்கிறது!

"அழகான ஆடவன் என்ஆசை நாயகனாகவேண்டும், இல்லையேல், அவன் இறந்துபோகவேண்டும் இது மேலே தீட்டிய பஞ்சணைப்பேச்சுக்குச் சொந்தக்காரியான, பட்டத்தரசியின் திட்டம். கடைசிவரை அதை அவள் நிறைவேற்றியே வந்தாள். வசீகரமான வாலிபரை வரவழைப்பது, விருந்துண்ணச்செய்வது, இது அவள் வாடிக்கை! விருந்து அறுசுவை உண்டியல்ல கனிரசமல்ல, அவள் தன்னையே விருந்தாக அளிப்பாள்! அந்த விருந்தை ஏற்றுக்கொள்ள மறுப்போருக்கோ, மரணம் நிச்சயம்! மந்திரத்தாலல்ல, மாயாசாலத்தாலல்ல, அதிகாரத்தால், மடைத்தனத்தைஅணியெனக் கொண்டிருந்தவனுக்குப் பெண்டாகி, அவனைத் தனது கைப்பாவையாக்கி வைத்துக்கொண்டிருந்ததால் இவ்வளவும் செய்ய முடிந்தது. அத்தகைய கொடியவளின் பெயர் மேசாலினா.

காமச்சேட்டையில், விபச்சாரத்தில், உலகில் ஈடு இணையற்றவள் என்று யாரையேனும் குறிப்பிடவேண்டுமானால், மேசாலினா வைத்தான் கூறவேண்டும். கோல் கொண்டவனின் மனைவியான மெசாலினா, ரோம் சாம்ராஜ்ய குச்சுக்காரியாக வாழ்ந்தாள்! அந்தப்புரத்தில் ஆபாச ரகங்களை ஆறெனப்பெருகவிட்டாள்! ஆடவர்கூட்டத்தை வேட்டையாடினாள். அவளது கண் எங்கே தன்மீது பாய்ந்துவிடுகிறதோ என்று ஆடவர் அஞ்சவேண்டியும் நேரிட்டது. அவ்வளவு பசி அவளுக்கு! காமருசியில், அவ்வளவு பிரேமை! இரத்த வாடைகண்ட புலிபாய்வதுபோல், அழகிய ஆணின் வாடை அடித்தால் போதும், அரசிமெசாலினா அங்கு படையெடுத்து விடுவாள். பேச்சினால் சிலரைச் சிறைபிடிப்பாள்! சிரிப்புச்சிலரைச் சொக்கவைக்கும்! சாகசத்தால் சிலரைச் சாய்ப்பாள்! சரசத்தால் சிலரைச் சிதைப்பாள்! இவைகள் பயன்தராவிட்டால், கிட்டாதாயின் வெட்டெனமறவென்று கிழப்பேச்சுப்பேசமாட்டாள்! பலவந்தப்படுத்துவாள்! "பஞ்சணைக்கு வருகிறாயா? படுகளம் போகிறாயா?" என்று கேள்விபிறக்கும். பஞ்சணைக்கு வாமறுப்போர் பிறகு பாரில் வாழ முடியாது! அதுதான் அவள்சட்டம்! அத்தகைய வேட்டையாடியே அவள் தன் பசியைத் தீர்த்துக்கொள்ள முடிந்தது! காமத்தீ அவளது அங்கங்களில் சதாகாலமும் கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருந்தது! அந்தப் பலிபீடத்திலே, தங்கள் வலிவு, வனப்பு, வாலிபம், வசீகரம் ஆகியவைகளைக் காணிக்கையாக வைத்தவர்கள் பலப்பலர்!

இவளை மணந்த மன்னனுக்கும் சதாகாலமும் பசி! நாள் தவறாமல், நாநூறு அறுநூறு பேருடன் சேர்ந்து, நாக்கிலே தழும்பேறும் அளவுக்கு, நானாவிதமான உணவு வகைகளைத்தின்று, பல்வேறு நாட்டுப்பானவகைகளைப்பருகி, உருளுவது; அவனதுவேலை!

அரசியின் அலுவல், அந்தப்புரத்தில், அரசனின் அலுவல், விருந்துமண்டபத்தில், கொலு மண்டபமோ, கோணற் சேட்டைக்காரர்கள் கொள்ளைத் திட்டம் தயாரிக்கும் இடம். இது, சாம்ராச்ய சித்திரம்! இதற்கு அரசன், கிளாடியஸ்!

ஓர் நாள் ஓடோடிவரும் சில சிப்பாய்களைக்கண்டு சிந்தை கலங்கிநின்றான் கிளாடியஸ்! அது மன்னனாகா முன்னம்! என்ன ஆபத்தோ, ஏதோ, என்று பயப்பட்டுக்கொண்டிருந்த கிளாடியஸை, அந்தச்சிப்பாய்கள், வணங்கி, வாழ்த்தி, நீரே இனி ரோம் சக்கிரவர்த்தி என்று கூறிப்பட்டஞ்சூட்டினர். ஆச்சரியத்தால், கிளாடியஸ் திகைத்தான். அரியாசனத்தமர்ந்தான், அரசபோகம், காலடியில் நிற்கக்கண்டான், புதையல் கிடைத்தவன் பூரிப்பதுபோல் பூரித்து, கரும்புதின்னக் கைக்கூலியா என்று கருதி, ஆடம்பரம் என்றபுரவி மீதேறிக்கொண்டான். வேகவேகமாகச் சென்றான். திடீரென, வாழ்க்கை கிளாடியசுக்குப்புதிதாகிவிட்டது.

அவன் நாலு மனைவிகளை மணம்செய்துகொண்டவன். சிலர் இறந்தனர், சிலர் விலக்கப்பட்டனர். ஐந்தாவதாகக்கொண்டான், இந்த அருங்குணவதி (!) மெசாலினாவை! நூலைப்போல் சேலை, தாயைப்போல மகள் என்பார்கள் அதுபோல், மெசாலினா, தனது தாயைப்போன்றவள், கெட்ட நடத்தையில். அரசனின் மனைவியானதும், மெசாலினா தனது வேட்டையைத்துவக்கினாள்: மந்திரிப்பிரதானிகள், சேனாதிபதிகள், சேவகர்கள், நடனசிரியர் இசைவாணர், என், யாரார் மீது மனம் செல்கிறதோ, அவர்கள்யாவரும் அரசியின் ஆசைநாயகர்களாயினர். வாழ்க்கையின் இலட்சியமே, வகை வகையான அனுபவங்கள் பெறுவதுதான், என்பதும், இச்சையைப் பூர்த்திசெய்து கொள்ளத்துணிந்த பிறகு, எதுவருமோ, ஏது போகுமோ, என்று எண்ணுவதே கூடாது என்பதும், எவர் தடுத்தாலும், கண்டித்தாலும், கேலிசெய்தாலும்,

கவலை கூடாது என்பதும், மெசாலினுவின் நீதிநெறி வாக்கியங்கள். இணங்கமறுக்கும் ஆடவரை இரக்க மற்றுக்கொல்வதில், துளியும் தயங்காதவள். மாதருக்குள்ள பண்புகளையும் மறந்துவிட்டு, மருவவா என்று அழைத்தபிறகு, ஒருவன்மடைத்தனமாக மறுத்துவிட்டால், மண்ணில் அவன் வாழ்வதே ஓர் இழுக்கு என்று, மெசாலினு கருதினுள். கைக்கு எட்டிய கனியைத் தின்னத் தடைப்பட்டால், கசக்கிப்பிழிந்து, குப்பையில் வீசு என்பாள் மெசாலினு.

போகபோக்கியத்தில் புரண்டு கொண்டிருந்த புல்லர்கள் நிரம்பிய ரோம் சாம்ராச்யத்தில், தமது அக்ரமச்செயலுக்கு அரண்மனை தடைவிதிக்குமோ என்ற அச்சத்தைமட்டுமே ஓரளவுக்குக் கொண்டிருந்த ஆடவர் கூட்டம் நடமாடிய ரோம்நகரில், அரசியே, விருந்துண்ண அழைக்கும்போது, கேட்கவேண்டுமா, கேளிக்கையின் போக்கை! எதிரியின் யானையைக்களத்திலே தழுவியதோட்கள், அந்தப்புரத்திலே, அரசி மெசாலினுவின் தோட்களைத்தழுவலாயின. மதியையும் தென்றலையும், மலையையும் மாநதியையும், களத்தையும் காவலரையும் பாடியகவிதாவிற்பன்னர்கள், மெசாலினுவின் மேனியில், மேதினியின் சோபிதத்தையும், அவளது கண்களில் நிலவொளியையும், புன்னகையில், பொன்தட்டில் புதைத்த வைரச்சித்திரத்தையும், அவளது ஆனந்த மூட்டும் பேச்சிலே அபிதான சிந்தாமணியையும், கட்டிலறையிலே காலத்தின் கனிவையும் கண்டோம், கண்டோம் என்று கவிபாடுவாராயினர்! ராசதந்திரிகள், அந்த நாட்டு மன்னனுக்கும் இந்த நாட்டு ஏந்தலுக்கும், எத்தகைய பகைமையை, எந்த நாட்டு அரசன்மூலம், கிளப்பிவிடலாம், என்ற சதிசெய்யும் வேலையையும் மறந்து, மாலையில் மெசாலினுவிடம் சாலையில் கூடிப்போவேர்மோ, அந்தப்புரத்துக்கு அர்த்தராத்திரி போவதா, அவளது அடிவருடும் நேரம் எப்போது என்ற இத்தகைய யோசனைகளில் காலந்தள்ளினர்.

கரிபரி காவலர் தாக்கினுலும் கலங்காத கற்கோட்டைபோல், இத்தகைய இயல்பினரான எண்ணற்றவர்கள் மெசாலினுவின் அன்பைப்பெற நான், நீ, என்று முந்திக்கொண்டும், முறுவல்மாருது, முகமன் குறையாது, வருக! வருக!! என்று வாஞ்சையுடன் அழைத்து, உபசரித்தாள் மெசாலினு. ஊரெங்கும் இதுபற்றியே பேச்சு! விழாவிலெல்லாம் இதுவே வேடிக்கை! வேந்தனே, விருந்து தவிரவேறென்றிலும் நாட்டங் கொள்வதில்லை யாரேனும், மெசாலினுபற்றிக் குறை கூறினுலும், கோபம் கிளம்பும் அரசனுக்கு! கோபம், பசியைக்கிளப்பிவிடும். பசிவந்ததும், பாவையைமறந்து, உணவு எங்கே என்று கேட்டுப்பெற்று, உண்டு உறங்குவான் மன்னன்.

மெசாலினுபாடு கொண்டாட்டம்! இரண்டோர் ஆடவர் மட்டுமே அவளுக்கிணங்க மறுத்தனர்—அதனுல் மாண்டனர்!

ரோம் சாம்ராச்ய செனட் சபை மெம்பரும், சீலருமான **வினீஷியஸ்** என்பார்மீது மெசாலினு வலை வீசினுள். ஊராள்வோனின் மனைவிக்கு இணங்கி ஊராள்வோனுக்கும் ஊருக்கும் ஊறுதேடும் உலுத்தனுகேன், என்று அவர் கூறிவிட்டார். மெசாலினு மயக்கினுள், அவர் மறுத்துவிட்டார், கெஞ்சினுள், கேட்கவில்லை, மிரட்டினுள், இணங்கவில்லை, எதிர்த்தாள், ஏமாறவில்லை! ஆனுல், சீறிய நாகம் தீண்டுவது போல், மெசாலினுவின் கோபம் அவரைத்தீண்டி, சவக்குழியிற் சேர்த்தேவிட்டது. அதற்கான சதியை, மெசாலினு தயாரித்துத், தனது சேவகர் மூலம் நிறைவேற்றி விட்டாள்.

அரண்மனையிலேயே, மெசாலினு, தனியாக ஓர் கூடம் அமைத்தாள்! காமவேள் நடனசபா மண்டபம் அது! அங்கு, சதங்கை ஒலியே சங்கீதம், வளைச்சத்தமே வீணை, வா, உட்கார், மதுஅருந்து, மலர் சூடு, என்பனவைகளே பேச்சு, செயலோ..........!

எவரும் வரலாம்! இன்பம் பெறலாம்!எவருக்கும் இல்லை என்றுரைக்காத இளகிய மனதும் இறுகிய உடலும் படைத்த மெசாலினு, "வந்தோரைக் கண்டானந்தித்து, வாராதவரைக் குறித்துவருந்தி, வானம் வெளுக்கும்போது வாடி, சூடிய பூ, துவையலானதைக் கண்டு புன்னகைகொண்டு," சுந்தரனே! நாளை மறவாதே! சுகுணு, உன்தோழனையும் அழைத்துவா! பிரதாபா, உன்மீது எனக்குக் கோபந்தான், நீ மூன்று நாட்களாக வரவேயில்லை, என்று வந்தவரிடம் கொஞ்சிப்பேசி வழியனுப்பிவைத்து, வாட்டம்தீர வானில் மீண்டும் நிலவு தோன்றவேண்டுமே என்று சோகிப்பாளாம். அந்த ஒய்யாரியின் ஓயாமடத்தில், கண்டதையும் விண்டதையும், கொண்டதையும் கொடுத்ததையும் எண்ணி எண்ணிக்களித்த ஆடவர் அனேகர்.

இவள் இங்ஙனம் காமக்கூத்தாடிக் கொண்டிருக்கையில், கலைக்கூத்தனெருவனைக் கண்ணுற்ருள். **ம்னீஸ்டர்** என்ற வாலிபன், நடனத்தில் சிறந்தவன், நாடுபுகழ வாழ்ந்தவன். அவனது அபிநயங்களைக்கண்ட அரசி, அடங்கா ஆசை கொண்டாள். "நர்த்தனம் புரியும் நல்லோய்! சிந்தையைவென்ருய் பொல்லோய்!" என்ருள்.

நடனக்காரனின் மனம் நர்த்தனமாடிற்று. அரசியின் நேசம் கிடைக்கும் என்பது ஆனந்தம் தருவதென்றுலும், அரசன் அறிந்தால், என்னுகும் என்பதை எண்ணி அஞ்சினுன்.

"உல்லாசி, உனது நேசம் எனக்குத்தேவை. ஆனுல் என் உயிரும் எனக்குத்தேவையன்ருே?"

"உயிர், உடல், யாவையையும் அன்புக்கு அர்ப்பணம் செய்துவிடு. கலையில் வல்லவனே! சிலையாநீ? சிந்தனையில்லையா! நான் உன்னை அழைக்கிறேன், நடுக்கம் உனக்கேன்!

"தேன்கூட்டிலே வண்டிருக்குமே!"

"வண்டு, பாடும், வேறென்ன செய்யும்?"

"கொட்டிடின், கொடிய நஞ்சாகுமாமே"

"அஞ்சாதே ஆடிடும் அழகா! நான் மருந்திடுகிறேன்"

"மனேகரி! மன்னிக்கவேண்டும். கொற்றவனின் கூர்வாள் என்உயிர் குடிக்கும். அவராணைபெருது நானேதும் செய்யேன்,,

மெசாலினுவுக்கும், நடனசுந்தரன் ம்நீஸ்டருக்கும் இதுபோல் உரையாடல் நடந்திருக்கவேண்டும். அவன் அரசனுக்கு அஞ்சினுன். அதற்கோர் சாகசம் செய்தாள் மெசாலினு.

அரசனிடம் சென்ருள், கொஞ்சினுள், குலவினுள், அவன் குழைந்தான்! "நாதா! இதோபாரும், இந்த நடனக்காரன் என்பேச்சை மதித்தானில்லை. நான் இடும் பணியைச்செய்ய மறுக்கிருன்" என்ருள். "அவ்வளவு அகம்பாவமா அவனுக்கு" என்று அரசன் சினந்தான், காவலரை ஏவினுன், கலைவல்லோன் வந்தான், "அரசியின் பேச்சைத்தட்டாமல் இனிநட. இது என்கட்டளை" என்ருன் அரசன், "தங்கள் சித்தப்படி" என்ருன் நர்த்தன நாயகன், மெசாலினு மெல்லச்சிரித்தாள், மேளம் கட்டிவிட்டது, பிறகு கீதமும் பரதமும்இருந்தவிதத்தை விஸ்தரிப்பானேன்!

இது மட்டுமல்ல அவளது சாகசம்! கணவனிருக்கையிலேயே, அவன் சம்மதம்பெற்று, வேருருவனையும் கலியாணம் செய்துகொண்டாள், காதகி, பிரபல குடும்பத்திலுதித்த **சைலாஸ்** என்ற இளைஞன் காந்தக்கல்லாளுன், மெசாலினுவின் உள்ளம் அவனிடம்சென்றது அவனைக்கலியாணமே செய்துகொண்டாள். தன துக்கணவனிடம் ஓர் கட்டுக்கதை கூறினுள். மடையன் நம்பினுன். "கால்கோளாருல் கணவனுக்குத் தீங்குண்டாகுமாம், ஆகவே கண்ணாளா!

(4ம் பக்கம் பார்க்க).

**தேன்சுரக்கப் பேசி!** 2-ம் பக்கத் தொடர்ச்சி

கள் கூட்டத்தில் ஒருவர் என்று தானே பொருள் படுகிறது என்று கேட்கிறேன். அவரது அன்றைய பேச்சு, ஒன்று கோழைத்தனத்தை மறைக்க கட்சியின் பேரில் குறைகூறியதாக இருக்கவேண்டும் அல்லது தனது கட்சியின் தொழில் துரோகம் செய்வது என்பதைத் தன்மையும் மறந்து கூறியதாக இருக்கவேண்டும். முன்னையதானால், அவர் முகமூடி போட்டுக் கொள்ள வேண்டும், பின்னையதானால், அவர் சிறைப் பட்டிருக்கவேண்டும். நான் கேட்கிறேன் ஆச்சாரியாரை, நாட்டுப்பாதுகாப்பு பெரிதா? கட்சிக் கட்டுப்பாடு பெரிதா? எதை நீர் மேலென மதிக்கிறீர்? நாட்டைக் காக்கவேண்டுவதே மேல், என்று நாடிமுறுக்கிழந்த நடுக்கியுங் கூறுவான். நீரும் அக் கருத்தே கொண்டவரென்றால், நீர் இருக்கும் காங்கிரஸ் கட்சியை உதறித்தள்ளிவிட்டு, ஊரைக்காக்க வீறுகொண்டெழ வேண்டாமா? நாட்டைக் காப்பாற்ற வேண்டுவதே முறைஎன்று கூறி, கட்சியைத் திருத்த முற்படுவது மேல்! அது முடியாவிட்டால், துரோகச்சபையிலே நான் இனி இரேன் என்றுகூறி, நாட்டுப் பாதுகாப்புக்காக ஆவனசெய்யல், இரண்டாந்தரமான நற்குணம். மூன்றாந்தரமானதல்ல, முழுமோசமானது, உமது இன்றைய போக்கு.

பள்ளம் என்று தெரிந்தும், விழச்செல்பவன் பித்தன்! நண்பன் என்று தெரிந்தும் ஏமாற்றுபவன் நயவஞ்சகன்! போதைஎன்று தெரிந்தும் பருகுபவன் குடியன்! நிரபராதிஎன்று தெரிந்தும், அடித்துத்துன்புறுத்துபவன் போக்கிரி! பிறன்மனைவி என்று தெரிந்தும் கூடுபவன் காமுகன்! நாட்டுக்கு ஆபத்து வருவதைத்தெரிந்து கொள்ளாதவன் ஏமாளி! அந்நேரத்தில் நமக்குப் பயமில்லை என்று நர்த்தனஞ் செய்பவன் கோமாளி! விஷம்பேச்சைப் பரப்புபவன் எதிரியின் உளவாளி! எல்லாம் தெரியும், எதிர்க்கத்தான் வேண்டும், எதிரியை அடக்க நீங்கள் முன்வாருங்கள், பயப்படாதீர்கள், என்றெல்லாங் கூறிவிட்டு, நான்மட்டும் வருவதற்கில்லை, காங்கிரஸ்காரர்கள் இதைச்செய்வதற்கில்லை, காங்கிரசல்லாத தோழர்களே! நீங்கள் இதைத் தயவுசெய்து செய்யுங்கள் என்று கூறும் ஆச்சாரியாருக்கு, நான் தரவேண்டிய அடைமொழி என்ன என்று உங்களைக் கேட்கிறேன். தோழர்களே! என்னென்று அழைப்பது அவரை!!

கள்ளப்புருடனிடம்மனைவிசரசமாடுவது எனக்குத் தெரியும். அவனையும் அவளையும், அடித்து வீழ்த்தத்தான் வேண்டும். அவளை விலக்கியாவது விடத்தான் வேண்டும். ஆனால், அவள் போய்விட்டால், எனக்கு உண்டியும் போய்விடும், ஓரோர்சமயம் கிடைக்கும் உல்லாசமும் போய்விடும், அதைப்பற்றித்தான் யோசிக்கிறேன், என்று எந்தக்கணவனாவது கூறுவானா!

நாட்டுத்துரைத்தனத்தார்போட்டுவைத்தஅமைப்பும், நாடாண்ட கட்சியும், நாடாள நாக்கில் நீரூறநிற்கும் கட்சியுமான காங்கிரசின் போக்கும் இருக்கும் விதங்கள் இவைகள், "காணக்கண் காட்சியே! கந்தன் காவடிமாட்சியே!! என்று ஏதாவதொரு பாட்டுப்பாட வேண்டியதுதான் போலும்! இத்தகைய இயல்பு படைத்தவர்களிடந்தான் சர். கிரிப்ஸ் நாட்டை ஒப்படைக்க மறுத்தார்! தவறா அது? இத்தகையவர்கள்தான் இங்கு முதல்சாதி! யோக்கியமா அது? இத்தகையவர்கள் இங்கு, மற்ற மக்களை மடக்கி வைத்திருக்கிறார்கள் என்ற இரகசியத்தைத் தெரிந்துதான் ஜப்பான் துணிவாக இங்குபாய்கிறது. நான்தான் கேட்கிறேன் கூறுங்கள் பார்ப்போம், இந்த நாடு ஆண்டுதோறும் எவ்வளவு பாரம் பாரமாகக் கற்பூரம் வாங்குகிறது என்பது ஜப்பானுக்குத் தெரியாதா! இவ்வளவு கற்பூரம் வாங்கும் நாட்டிலே, காசும் கருத்தும் காலமும் எவ்வளவு வீண்வேலைக்குப்பயனாகிறது என்பதை ஜப்பானியன் தெரிந்து கொண்டிருக்கமாட்டானா? டார்ப்பிடோவுக்கும் சப்மெரைனுக்கும், விமானத்துக்கும் கப்பலுக்கும் மற்ற நாடுகள் பணத்தைச் செலவிட்டுக் கொண்டிருக்க, இங்கு கற்பூரத்துக்கு மட்டும் இவ்வளவு காசு செலவிடுபவர்கள், எவ்வளவு முரட்டுப் பிடிவாதமுள்ள குருட்டுக் கொள்கையில் சிக்கிக் கொண்டனர் என்பதுபற்றி ஜப்பானியன் எண்ணியிருக்க மாட்டானா? இவ்வளவு "மிருகப்பிராயத்தை" மக்களுக்குப் புகுத்திய ஓர் கூட்டம் இருக்கும் என்பதும், அந்தக்கூட்டம், மக்களைச்சிந்தனையில் சிதைந்தவர்களாய், செல்லரித்த முறைகளில் உழல்பவர்களாய், அடிமைகளாய், அஞ்சி அஞ்சிச் சாகும் அபலைகளாய், ஆக்கிவைத்திருக்கும் என்பதை அறியாமலிருந்திருப்பார்களா? அது தெரிந்துதான், ஜப்பானியர் துணிந்து பாய்கின்றனர்! அந்த வேளையில்தான் இங்கு நீளப்பேச்சும் கோணற் திட்டமும், சூன்ய ஞானமும், சூட்சித்திறனும், தாண்டவமாடுகின்றன.

சஞ்சீவி பர்வதத்தின் சாரலிலே, நோகாமல் முத்தங்கள் நூறுகொடுப்பேன் என்றுரைத்த வஞ்சியிடம், கொஞ்சியகுப்பன் உலகக்காட்சிகளை உணர்த்திவிட்டு இந்நாட்டைப்பற்றி வெளிநாட்டார் விளம்புவது என்னவென்பதைக் கூறிடுங் காலையில்

"கட்டிச் சழகத்தின் கண்ணவித்துத் தாழன்னக்
கோட்டி அளர்க்கும் தருக்கர் கணக்கற்றார்.
தேன்சுரக்கப்பேசி இந்துதேசத்தைத் தின்னுதற்கு
வான்சுரரை விட்டுவந்த பூசுரரும் வாழ்கின்றார்.
இந்த உளைச்சேற்றை, ஏறாத ஆழத்தை
எந்தவிதம் நீங்கி நமை எதிர்ப்பார்?",

என்று கூறினான், என்று தீட்டுகிறார் தீந்தமிழில் கவி பாரதிதாசன்.

அந்த குருக்கள் கூட்டத்தின் கருதந்த கருந்தனந்தான், காதும் கண்ணும் பழுதானது மட்டுமின்றி, கருத்தும் பழுதானதோ என்று நானும் நீங்களும் எண்ண வேண்டிய நிர்ப்பந்தத்தை உண்டாக்கும், சொல்லையும் செயலையும் காட்டிவரும் ஆச்சாரியார்!

---

## காஞ்சி, பச்சையப்பன் கலாசாலை
## பழய மாணவர் சங்கம்.

காஞ்சீபுரம் பச்சையப்பன் கலாசாலை பழய மாணவர் சங்க துவக்கவிழா. தலைமை ஆசிரியர், தோழர் கன்னியப்ப முதலியாரின் அரியமுயற்சியின் பயனாக, 21—4—42 மாலை, பள்ளி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. தேநீர்விருந்துக்குப்பிறகு. பழய மாணவரும். சித்தூர் பெருநிலக்கிழவருமான தோழர் கன்னையாவின் தலைமையில் தோழர்கள் தலைமை ஆசிரியர் கன்னியப்ப முதலியார் அப்பாண்டை-M. A. L. T, சி. சீனுவாச்சாரியார் ஆகியோர் சொற்பொழி வாற்றினர் தோழர் C. N. அண்ணாதுரை. பச்சையப்பரின் நினைவுகுறித்து சொற்பொழிவாற்றினார். தோழர்கள் V. V. துரைசாமி ஐயர், கணபதிராவ் பிள்ளை, வச்சிரவேலு B. A. L. T., பழயமாணவர் சங்கக்காரியதரிசிகள் ஆகியோரும் சொற்பொழி வாற்றினர். ஒதெல்லோ என்ற ஷேக்ஸ்பியர் நாடகத்தில் ஓர் காட்சி நடித்துக்காட்டப்பட்டது. தலைவரின் முடிவுரை வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது. விழாவுக்கு டிஸ்ட்ரிக்ட் முன்சிப், A. பாலகிருஷ்ண முதலியார், A. R. P. ஆபீசர், டாக்டர் அநந்தநாராயணன், கவுன்சிலர்கள் வீரராகவ முதலியார், வா. கி. ரா. கோவிந்தராஜ முதலியார். முனிசாமி முதலியார் சாம்பசிவம், முதலிய பலரும் வந்திருந்தனர்.

தலைமை ஆசிரியர் தோழர் கன்னியப்ப முதலியாரின் அருங்குணங்களைப் பாராட்டியும், அவரது முயற்சியினால், பலன்கள் பல ஏற்படுவதை எடுத்துரைத்தும், விழாவுக்கு வந்திருந்தோர், அவரைப் பாராட்டினர்

### கலாசாலை ஆண்டுவிழா.

சென்றவாரத்தில், காஞ்சீபுரம் பச்சையப்பன் உயர் நிலைப்பள்ளியின் ஆண்டு விழா, மாஜிபிரின்சிபால் தோழர் P. N. சீனுவாசாச்சாரியார் தலைமையில் சிறப்புற நடந்தேறியது மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்ட பின்னர். டாக்டர் A கிருஷ்ணசாமி, ஆங்கிலத்தில் அரியதோர் சொற்பொழிவாற்றினார்.

# போர்ப் பொறிகள்

—※—

## 200-நாட்களில்!

இன்னம் 200-நாட்களில், அமெரிக்கா, எதிரியை எதிர்த்துத் தாக்கக்கூடிய தளவாட சக்தியைப் பெற்று விடும் என்று அமெரிக்க நிபுணர் கூறுகிறார்.

## அரபிக் கடலுக்குள்!

ஜப்பானியக் கடற்படை வங்காள விரிகுடாவில் சேட்டை செய்ததுபோல், இனி, அரபிக்கடலிற் புகுந்து, சேட்டை செய்யுமென்றும், அவ்வழியாக ரஷியாவுக்கு அனுப்பும் சப்ளையைத் தடுக்க முற்படுமென்றும் ராணுவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

## இஸ்லாத்துக்காக!

இந்தப் போரில். ஈடுபடவேண்டியதன் அவசியத்தை விளக்கி சர். சிக்கந்தர் பேசுகையில், ஜப்பானியர் இஸ்லாமிய நாடுகளைச் சிதைத்ததையும், அச்சு நாடுகள் மத்தியக் கிழக்கில் இஸ்லாமிய நாடுகளைமிரட்டுவதையும் விவரித்துவிட்டு, இஸ்லாத்தின் இலட்சியங்களைக் காப்பாற்ற, முஸ்லீம்கள், இந்தப்போரில் பெரும் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும் என்று கூறினார்.

## டோக்கியோவில்

அமெரிக்க விமானங்கள், குண்டு வீசியதால், டோக்கியோ மக்கள் மருண்டுவிட்டனர் எனத்தெரிகிறது. இது ஆரம்பஉதை, மேலும் மேலும் அதிகமான குண்டு வீச்சு இனி உண்டு என்று அமெரிக்கப் பத்திரிகைகள் எழுதுகின்றன். கடலிலும் வானிலும் நானே அரசன் என்று கூவும் ஜப்பானின் கொட்டம் அடங்க, டோக்கியோ, முதலிய நகரங்கள் தாக்கப்படவேண்டும்.

## நார்வேயில் நாஜி ஒத்திகை

நார்வேயில், நாஜிப்படைகள் மலைப்பகுதிகளில் ராணுவ ஒத்திகைகள் நடத்தின. இதனை ஜெனரல் லிஸ்ட் எனும் ஜெர்மன்படைத்தலைவர் நடத்திவைத்தார்.

## பெர்லினில் பீதி

பிரிட்டன், ஐரோப்பாவில் படைஎடுப்பு நடத்தக் கூடும் என்றபீதி பெர்லினில் உண்டாகிவிட்டது. இதன்பொருட்டே, பிரான்சில் நாஜிப்படைகளுக்கு புதுத்தலைவர் ஹிட்லரால் நியமிக்கப்பட்டதாகவும், இந்தக்கிலி காரணமாகவே லவால் பிரன்ச்சு அரசியல் தலைவராக அமர்த்தப்பட்டாரென்றும் கூறப்படுகிறது. பிரிட்டன் வந்திருந்த அமெரிக்கப் படைத்தலைவர், ஐரோப்பாமீது பிரிட்டன் படைஎடுத்தால், அமெரிக்கப்படைகளும் உடன்செல்லும் என்று கூறினது கவனிக்கத்தக்கது. அமெரிக்க விமானப்படையும் பிரிட்டனுக்கு அனுப்பப்படும் என்றும் அவர் கூறினார். இந்தப்பேச்சு பெர்லினில் பயத்தை உண்டாக்கிவிட்டதென்பதில் சந்தேகமில்லை.

## ரஷிய ரணகளம்

ரஷியரணகளத்திலே நாஜிப்படைகள் தோல்வி மேல் தோல்வி அடைந்தபடி உள்ளன. பிணத்தைப் புதைக்கும் வேலையே நாஜிதலைவர்களுக்குச் சரியாக இருக்கிறது.

## ஜப்பானியப்படைகள் ஓட்டம்

டோக்கியோ தாக்கப்படுவதால், ஜப்பானுக்கு வெளியே உலவிக்கொண்டுள்ள படைகளிற் சிலவற்றை ஜப்பானைக்காப்பாற்ற திருப்பி அழைக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

## வில்க்கியின் வீரம்!

எத்தகைய தியாகம் செய்தாவது இந்தப்போரில் ஜப்பானையும், ஜெர்மனியையும், அமெரிக்கா முறியடித்தே தீரவேண்டும் என்ற தீர்மானத்தை, மிஸ்டர் வெண்டல் வில்க்கி, தமது கட்சிமாநாட்டில் பிரேரேபிக்கப் போகிறார். மேற்படி மாநாடு சிகாகோவில் கூடப்போகிறது.


மந்தாரவதி

கச்சதேவயானி புகழ்,
T. R. ராஜகுமாரி
பக்தகௌரி புகழ்
S. D. சுப்பையா,
சபாபதி புகழ்
காளி என். ரத்தினம்,
சி. டி. ராஜகாந்தம்,
ஆர். பத்மா,
கொக்கோ
ஆதிலக்ஷ்மி,
சி. எஸ். டி. சிங்,
முதலியோர் நடிக்கும்
புராண
புண்ணிய படம்!

23-4-42
வியாழன் முதல்
கும்பகோணம்
ராஜா டாக்கீஸ்
*
20—4—42 முதல்
வந்தவாசி,
ஜெயலக்ஷிமி டாகீஸ்
*
விபரங்களுக்கு எழுதவும்:-
பொன்ராஜ்
பிக்ஷர்ஸ்.
சின்னகாஞ்சிபுரம்.


Printed at the United Printing Works, Hodgsonpet, Conjeeveram.
and Published by C. N. Annadurai, M. A. at 51 Nimanthakara Street, L. Conjeeveram.